Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்தியதரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4—அத்தியாயம் 13.

மற்ற ஐரோப்பியர்களுக்கும் எனக்கு மிருந்த நெருங்கிய சம்பந்தத்தைப் பற்றிக் கூறுவதற்கு முன் இரண்டு மூன்று முக்கிய விஷயங்களைப்பற்றி கூறவிரும்புகிறேன்: ஒரு நெருங்கிய சம்பந்தத்தைப்பற்றி மாத்திரம் முதலில் கூறவேண்டியது அவசியம். மிஸ் டிச்மாத்திரம் என்னுடைய முழு வேலைகளையும் கவனிக்கப் போதுமானதாயில்லை. எனக்கு இன்னும் அதிக உதவி வேண்டியிருந்தது. ஸ்ரீ. ரிட்ச் என்பவரைப்பற்றி இதற்கு முன் எழுதிய அத்தியாயங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். அவரை எனக்கு நன்றாய்த் தெரியும். அவர் ஒரு வர்த்தகக் கம்பெனியில் மானேஜராயிருந்தார். என்னுடைய விருப்பத்திற்கிணங்கி வேலையைவிட்டு வந்ததோடு எனக்கிருந்த அதிக வேலையின் சுமையையும் ஒருவாறு குறைத்துவிட்டார். "இந்தியன் ஒப்பினியன்" என்ற பத்திரிகையை நடத்த வேண்டுமென்று அச்சமயத்தில் ஸ்ரீமான் சுக்லால் என்னிடம் வந்து யோசனை கேட்டார். இவர் இதற்கு முன்பே ஒரு அச்சுக்கூடத்தை நடத்திவந்தார். எனவே நானும் அந்த யோசனைக்கு சம்மதித்தேன். ஆகையால் 1904-ல் பத்திரிகை முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீ. சுக்லால் நாஜார் அதற்கு முதல் ஆசிரியரானார். அப்பத்திரிகையைப் பற்றிய பொறுப்பெல்லாம் நானே ஏற்று நடத்தவேண்டியிருந்ததால் எனக்கு வேலைகள் அதிகமாயின. நானே எல்லா பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு வந்தேனென்பதால் ஸ்ரீமான் சுக்லால் அதை ஏற்று நடத்த முடியாதென்று சொல்ல முடியாது. அவர் இந்தியாவில் வெகு காலம் ஒழுங்காக பத்திரிகை நடத்தி வந்திருக்கிறார். ஆனால் நான் இருக்கும் பொழுது தென்னாப்பிரிக்காவைப் பற்றி எக்கட்டுரையையும் அவர் எழுத விரும்பவில்லை. என்னிடத்தில் அவருக்கு அதிக நம்பிக்கையும் விசுவாசமுமுண்டு. எனவே தலையங்கம் முதலியவைகளுக்கெல்லாம் என்னையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இன்று வரையில் அப்பத்திரிகை வாரப் பத்திரிகையாகவே இருந்து வருகிறது. ஆரம்பத்தில் அப்பத்திரிகை குஜராத்தி, ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் முதலியவைகளில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. தமிழிலும் ஹிந்தியிலும் பிரசுரித்தது வீணென்பதை பிறகு அறிந்து கொண்டோம். நாங்கள் எக்காரியத்திற்காக அப்பத்திரிகையைப் பிரசுரித்தோமோ அப்பிரயோஜனத்தை அதனால் அடையவில்லை. அதைத் திரும்பவும் பிரசுரித்துக் கொண்டே போவது எனக்குக் கஷ்டமென்றே தோன்றிற்று. அவை இரண்டையும் நிறுத்திய பிறகுதான் எனக்கு மனதும் நிம்மதியாயிற்று.

### பத்திரிகையின் பணக்கஷ்டம்.

பத்திரிகை நடத்துவதில் என்னுடைய பணத்தைப் போட்டு வைக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் பண உதவியில்லாமல் அப்பத்திரிகை ஒழுங்காக நடக்கமாட்டாதென்பதை அறிந்து கொண்டேன். நான் அப்பத்திரிகையின் ஆசிரியரல்லவென்பதை அங்குள்ள ஐரோப்பியரும், இந்தியரும் அறிவார்களெனினும் என்னாலேயே அப்பத்திரிகை நடக்கிறதென்பதையும் அறியாமலில்லை. பத்திரிகை ஆரம்பிக்காமலே இருந்தால் எவ்வித கஷ்டமும் உண்டாகிவிடப் போவதில்லை. ஆனால் ஆரம்பித்தவுடன் நிறுத்துவதால் கஷ்டமேற்படுவதோடு, அதனால் அவமானமும் நேரும். ஆகையால் எனக்கு மிஞ்சும் பணத்தையெல்லாம் அதற்கென்றே செலவிட்டு வந்தேன். மாதா மாதம் அதற்காக 75 பவுன் கொடுக்க வேண்டிவந்ததென்றே எனக்கு ஞாபகமிருக்கிறது.

ஆனால் பத்திரிகை இந்தியருக்கு அதிக நன்மை செய்திருக்கிறதென்றே எனக்குத் தோன்றுகிறது. வர்த்தக விஷயங்களில் அது சம்பந்தப்படக் கூடாதென்பது என்னுடைய பிரியம். அப்பத்திரிகை என்னுடைய பராமரிப்பின் கீழிருந்தவரையில் என்னுடைய வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களோடு அப்பத்திரிகையும் மாறுதலடைந்து கொண்டே வந்தது. வாரா வாரம் என்மனதில் சரியெனத் தோன்றியதைப் பத்தி பத்தியாக எழுதிவந்ததோடு சத்தியாக்கிரகத்தைப்பற்றி எவ்வித பொருள் கொண்டேனோ அதையே அடிக்கடி எழுதி வந்தேன். 1914-ம் வருஷம் வரையில், சிறையிலிருந்த நேரங்களில் போக பாக்கி சமயத்தில் வெளியான பத்திரிகையில் என்னுடைய கட்டுரையில்லாததே கிடையாதென்பது திண்ணம். ஆழ்ந்த யோசனையின்றி எழுதப்பட்ட ஒரு வார்த்தையையாவது அதில் காண முடியாது. பிறரைத் திருப்தி செய்வதற்காகவாவது, அல்லது விஷயங்களை அதிகப்படுத்தியாவது அதில் கூறியதேயில்லை. என்னை அடக்கியாள்வதற்கு அப்பத்திரிகை பயன்பட்டதென்பதில் சந்தேகமில்லை. மேலும் என்னுடைய நண்பர்கள் எனது அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கும் செளகரியமானதாயிருந்தது.

### ஆசிரியர் பொறுப்பு.

பத்திரிகையில் காணும் விஷயங்களைக் கண்டிப்பவர்கூட எழுதுவதற்குரிய அம்சமொன்றும் அதிலில்லை. கண்டிக்க முன் வருபவர்களுக்குக்கூட இடமில்லையென்பதே என்னுடைய அபிப்பிராயம். அப்பத்திரிகையில்லாமல் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தியிருக்க முடியாது. சத்தியாக்கிரக இயக்கத்தின் உண்மை முன்னேற்றத்தையும், தென்னாப்பிரிக்கா இந்தியர் நிலைமையையும் அறிந்து கொள்ள பொதுஜனங்களுக்கு அப்பத்திரிகை அதிகப் பயன்பட்டது. அதனுடைய உதவியைக்கொண்டே எல்லா வகை அபிப்பிராயங்களுமுடைய மனிதர்களின் இயற்கை குணங்களை அறிந்து கொள்ள எனக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பத்திரிகையின் ஆசிரியருக்கும் வாசகர்களுக்கும்நெருங்கிய பந்தம் ஏற்படுவதற்காகவே முயன்று வந்தேன். பல நிருபர்கள் அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டேயிருந்தனர். சிலர் கோபமாய் எழுதினர்; சிலர் தூஷித்தனர்; சிலர் ஆசரித்து எழுதினார்கள். அவைகளுக்கு பதிலளிக்க நன்றாகப் படிக்க வேண்டியிருந்தது. ஆகையால் அதுவே எனக்கு சிறந்த படிப்பாயிற்று. மேலும் நிருபர்கள் எழுதிய கடிதங்கள் என்னைப் பரிசோதிப்பனவாகவே இருந்தன. உண்மையில் ஒரு பத்திராதிபருக்கு உள்ளபொறுப்பு இன்னதென்பதை அறிந்துகொண்டேன். பிறகு செய்யவேண்டிய காரியங்களுக்கு நான் பத்திரிகை மூலம் பொதுஜனங்களிடம் பெற்றிருந்த அன்பு அதிகமாகப் பயன்பட்டது.

"இந்தியன் ஒப்பினியன்" ஆரம்பித்த முதல் வருஷத்தில் அப்பத்திரிகை பொதுஜன சேவையையே முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்தது. ஒரு பத்திரிகைக்கு அதிக சக்தியுண்டு. தண்ணீர் பயிர்களுக்கு அவசியமே எனினும் அதிகமாகப் போய்விடில் பயிரையே அழித்துவிடும். அதுபோல் நிதான புத்தியில்லாத ஆசிரியர் எழுதும் பத்திரிகைகளும் அதிகத் தீங்கிழைத்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. ஒரு ஆசிரியர் பிறருடைய தூண்டுதலால் நடத்தப்படுவாராகில் அது நிதானமில்லாததைவிடப் பெருந்தீங்கையே இழைக்கும். நான் கூறுவது சரியானதாயிருந்தால் உலகத்திலுள்ள பத்திரிகைகளில் எத்தனை பத்திரிகைகள் அப்பரீட்சைக்கு நின்று தேறும்? சில பத்திரிகைகள் பயனற்றவைகளென்றூலும் அவைகளை நிறுத்தத்தான் யாரால் முடியும்? நியாயாதிபதியாயிருந்து இவை நன்மை பயக்கத்தக்கவை, இவை அத்தகையவைகளல்ல என்று யாரால் கூறமுடியும்? நன்மையும் தீமையும் எவ்விதம் சேர்ந்தே இருக்கின்றனவோ அதேபோல நல்ல பத்திரிகைகளும் சேர்ந்தேதானிருக்கும். ஆனால் மனிதர்தான் அவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

# ஸ்ரீ கோவிந்தசாமி யோகிகள்.

பெருநாழி மகாதப சிரேஷ்டர் கவிராஜ வீ. சங்குமுத்துப் பிள்ளை எழுதியது:—

சேதுபதிமன்னர்கள் அரசாக்ஷிக்குட்பட்ட இராமநாதபுரம்சமஸ்தானத்தின் தென்மேற்கு எல்லைக்கோடியில் பெருநாழி என ஒரு கிராமம் உளது. அது முதுகுச்செல்லையாபுரம், இராணிசேதுபுரம், இராமசமுத்திரம், குமாரபுரம், முத்துராமலிங்கபுரம், நிம்மநாதபுரம், பாலசுப்பிரமணியபுரம், முத்திருளாண்டிபுரம், வீரமச்சன்பட்டி, சண்முகபுரம் என்னும் 10 கிராமங்களையும் தனக்கு உட்கிடையாக்கி தலைசிறந்த தலைநகரமாய் விளங்குகின்றது. அதில் பற்பல வருணத்தார்களும் பண்புடன் வாழ்ந்துவருகின்றனர். தபாலாபீஸ், போலீஸ் ஸ்டேஷன், கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு, சமஸ்தான டிவிஷன் கச்சேரி முதலிய ஆபீஸ்களும், விநாயகர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, பராசக்தி ஆலயங்களும், பின்னும் பல கிராம தேவதை கோவில்களும், மகமதியர் பள்ளிவாசலும், புரொட்டஸ்டண்டுக் கிருஸ்தவ, ரோமன் காத்தோலிக் கிருஸ்தவ ஆலயங்களும் அமைந்துள்ளன.

பூர்வ காலத்தில் இப்பெருநாழியை எரப்பு நாயக்கர் என்ற ஒரு சிற்றரசர் ஆண்டு வந்தனர். எட்டயபுரம் சமஸ்தானத்து ஆதீனவரலாறுகளைக் குறித்து எழுதி அச்சிட்டுள்ள "வம்சமணி தீபிகை" என்னும் புஸ்தகத்தில் எட்டயபுரம் சமஸ்தானத்திற்கும், ஆற்றங்கரை சமஸ்தானத்திற்கும் இரண்டு புத்திரர்களைப் பெருநாழியரசர் எரப்பு நாயக்கர் சுவீகாரம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பெருநாழியை யொட்டித் தென்மேற்குத் திசையில் ஒரு கிராமமிருந்து நெடுநாள் முன்னரே எடுபட்டுப்போனதாகத் தெரியவருகிறது. அதனைச் சிறுநாழியென்று சொல்லுகின்றனர். பெருநாழியைப் பழசை நகரம் என்று பாடல்களில் பாடுவது நெடுங்கால வழக்கமாகத் தெரிகிறது. 1857-ம் வருடத்தில் 2 ஆகாயக் கற்கள் இப்பெருநாழிக் கிராமத்திற்கு வெளியில் புன்செய்க் காட்டில் வீழ்ந்தன. அக்கற்கள் ஆகாயத்திலிருந்து விழும் பொழுது நாலாபக்கமும் 30 மைல் தூரம்வரை கிடுகிடுவென்னும் அதிர்ச்சியுண்டாயிற்று. அதனை நேரிலிருந்து கண்ட முதியவர்கள் இன்றைக்கும் சொல்லுகிறார்கள். அக்கற்களை சென்னைப் பலபொருட்காக்ஷி சாலைக்கு கவர்ன்மெண்டார் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று 130 ராத்தலும், மற்றொன்று 34 ராத்தலும் எடையுள்ளவைகள். அக்கற்கள் விழுந்திருந்த காரணத்தினாலே ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் இதயத்திலும் இப்பெருநாழிக் கிராமத்தின் பெயர் பதிந்து கிடக்கலாயிற்று. இருப்புப்பாதை அல்லது ரோட் மார்க்கம் சம்பந்தமில்லாத கிராமமாயிருப்பதால் இவ்வூருக்கு இத்தனை அடையாளங்களும் சொல்ல வேண்டியதாயிற்று. அருப்புக்கோட்டையிலிருந்து ஒரு கிளை ரோடு இப்பெருநாழி மார்க்கமாக மாரியூர் உப்பளம்வரை போவதாக லோகல் போர்டிலிருந்து உத்தரவாகிச் சர்வே நடந்திருக்கிறது. அது விரைவில் நடந்தேறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது பெருநாழிக் கிராமத்தில் கடந்த 2 வருஷகாலமாக யோகியொருவர் வந்து யோகத்தில் அமர்ந்திருக்கின்றனர். அவரது சரித்திரத்தை ஒருவாறு கேள்வியாலும் நேரிற் பார்த்தபடியும் இங்கு வரைகின்றேன். இவரது இயற்பெயர் கோவிந்தசாமி. பெருநாழிக் கிராமத்திற்குக் கீழ்த்திசையில் சுமார் 3 மைல் தூரத்திலுள்ள கீழமாவிலங்கை யென்னும் ஊரே இவர் பிறந்த இடம். இவர் கொண்டயங்கோட்டை மறவர். இவரது தந்தை இராமத்தேவர்; தாயார் சுந்தரம்மாள் என்ப. இவர் இளம் பிராயத்தினராக இருக்கும் பொழுதே சிறிது எழுதப் படிக்கத்தெரிந்து கொண்டிருந்தார். "விளையும் பயிர் முளையிலே" என்பதுபோல நாடோறும் விநாயகர் கோவில் சென்று தெரிசித்துக் கொண்டு அவர் மனதிற்குத் தோன்றிய சிற்சில விரதங்களும் கொண்டு நடத்துவரலாயினர். கதை காவியங்கள் கேட்பதிலும் படிப்பதிலும் விருப்பங்கொண்டிருந்தனர். புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளில் கடவுள் பிரசன்னராகி வரங்கொடுத்ததாக வரும் சரித்திரங்களையெல்லாம் மெய்யாக நம்பிவந்தனர். பக்தியோடு நினைத்தால் எனக்கும் சுவாமி பிரசன்னராகி என் வரங் கொடுக்கமாட்டார் என்று தமக்குள்ளே எண்ணிக் கொண்டிருந்தார். கண்ணப்ப நாயனார் கண்ணையகலும் பொழுது சிவபெருமான் வெளிப்பட்டு, நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்று நாயனார் கையைப் பிடித்துக் காப்பாற்றினது போல என்னையுங்காப்பது உறுதி. பாவபுகம், புண்ணியயுகம் என்பதெல்லாம் சோம்பேறிகள் வார்த்தை; எல்லாயுகமும் ஒன்றே என அழுத்தமாக எண்ணியிருந்தார். இவரது இத்தகைய உள்ளக் கருத்து மதுரையில் கண்டு பேசிய சங்குமுத்துப் பிள்ளையவர்களிடம் இவர் சொல்லிய வாய்மொழியிலிருந்து தெரியலாயிற்று.

இவ்வாறு ஒழுகிவரும் கோவிந்தசாமி 1922 ஞு மதுரைக்குச் சமீபத்திலுள்ள திருமாலிருஞ் சோலையென்னும் அழகர் கோவில் ஆடித் திருவிழாவுக்குப் போய் வர எண்ணினர். கோவிலுக்குப் புறப்படும் பொழுது தமது நண்பர் அரசப்பத்தேவரிடம் ஒரு வாளாயுதத்தை இரவலாகக் கேட்டார். அதற்கு அவர் இஃது ஓர் அருமையான ஆயுதம்; பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பித்தல் வேண்டுமெனக் கூறி வாளைக் கொடுத்தனர். கோவிந்தசாமி அதற்கு மறுமொழியாக நான் உயிரோடிருந்தால் உனக்கு அரிவாள் வந்து சேர்வதில் ஐயமில்லை யென்று சொல்லிவிட்டு வெட்டரிவாளை வாங்கிக் கொண்டு வெளியேறினர். புறப்பட்ட மறுதினமே சொக்கலிங்கக் கடவுள் அங்கயற்கண்ணி தன்னொடு அமர்ந்த ஆலவா யென்னும் மதுரையம்பதி போய்ச் சேர்ந்து, புதுமண்டபத்திலுள்ள ஒரு கடையில் சாமியாடிகள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் ஆவேசம் வந்து ஆடுகையில் கட்டிக் கொள்ளும் கருங்கச்சை ஒன்றும், தலையிலிடும் குல்லாய் ஒன்றும், விலைக்கு வாங்கிக் கொண்டு அழகர் மலை போய்ச் சேர்ந்தார். அங்குச் சென்று சில நாட்கள் அன்னபானமின்றி அழகர் சேவையிலேயே உறைந்திருந்தார். அழகர் பிரசன்னராகிக் காட்சி கொடாதொழியின் தம் கழுத்தைக் கையிலுள்ள கட்கத்தால் அரிந்துவிடுவதென்ற வைராக்கியம் பூண்டு அங்கிருந்தனர். அழகர் பிரசன்னராகவே இல்லை.

"ஓராயிரமாண் டெவசித்துக் கழிந்தா
[லோரோர் தலையாகச்

சிரச் சிரமொன் பதுந்தடிந்து செந்தீ
[யிடையோ மம்புரிந்து

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## 11-வது நாடார் மகாநாடு.

### 3-வது அறிக்கை.

நமது சங்கம் ஜென்மித்த தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்தில் 11-வது மகாநாடு நடைபெறுவதற்கேதுவான சகல நடவடிக்கைகளும் செவ்வனே நடைபெறுகின்றன. ஏராளமான டெலிகேட்டுகள் சௌகரியமாய் விஜயம் செயவதற்கு அரண்மனைத் தோட்டத்தில் சமையல் சாப்பாட்டுக்குச் சிங்காரக் கொட்டகைகள் அலங்காரத்துடன் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். டெலிகேட்டுகள் தங்குவதற்காக வசதியான இடங்கள் அமைக்கப்பெற்றன. வால் போஸ்டுகளும், அழைப்பு நோட்டீஸ்களும் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. அபிமானிகள் டிக்கெட் விற்பனைக்காக தஞ்சை ஜில்லாவின் பலபாகங்களுக்கும் விசேஷ கிளர்ச்சியுடன் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். வெளியூர் அபிமானிகள் லெட்டர்கள் மூலம் உற்சாகமூட்டுகிறார்கள் ஏராளமான டெலிகேட்டுகள் விஜயம் செய்வதற்குப் போதுமான ஆதரவுகளும், ஆரவாரங்களும் இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லா வாசிகள் வெகு ஊக்கம் காட்டுகிறார்கள். வாலிபர்களின் முயற்சி மிகவும் குறிப்பிடத்தக்கவிதமாய் சிரத்தை எடுக்கிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து தூண்டுதலான லெட்டர்கள் குவிந்து கொண்டேயிருக்கின்றன. டிக்கெட் விற்பனைக்காக சுற்றுப்பிரயாணம் செய்யும் தனவான்களை எதிர்பார்த்தவண்ணமாய் இருக்கிறார்கள். வாலண்டியர்களை பொறுக்கி அமைப்பதற்கு ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு ஆண்டுகளாக கான்பரன்ஸ் என்ற தொனியில்லாத காரணத்தாலும், சகல முறையிலும் பயிற்சி பெறவும், ஆலயங்களில் விசேஷகீர்த்தி பெற்றதுமான கும்பகோணத்தில் 11-வது கான்பரன்ஸ் நடைபெறுவதாலும் நமது குல அபிமானிகளால் புகழப்பட்டுவருகிறது. ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். யல். ஸி. அவர்கள் சதா ஊக்கத்துடன் பிரசாரம் செய்வதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பி. ஏ. பி. யல். எம். யல் ஏ. அவர்களின் உருக்க சுருக்கமான வார்த்தைகளின் உபந்நியாசத்துக்காக தஞ்சாவூர் ஜில்லா தேச நண்பர்கள் மிக ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

உபசரணைக் கமிட்டி ஜெனரல்
சேகரட்டேரி.

## வாரக் கொண்டாட்டம்.

வடமதுரை (கோயமுத்தூர்)

பஜனைக்கோஷ்டியுடன் ஊர்வலம் வந்து நாடார் மஹாஜனங்களிடம் பணம் நன்கொடையாக வசூல் செய்து, இது தான் முதலாண்டாகையால் ஷை பணத்தை கிருஷ்ண ஜயந்திக்காகச் செலவழிக்கப்பட்டது. ஏகப்பட்ட ஜனத்திரள் கூடியிருந்தது. அதில் முக்கியமாயுள்ள நாடார் மஹாஜனங்கள் கூடிய ஓர் சபையில் நெடியதோர் பிரசங்கம் 5 மணிவரையில் நடத்தப்பட்டது. முதல் கூட்டமாயினும் ஜனங்கள் கவலையாயிருந்தது மெச்சத்தக்கது.

27—8—27 சனிக்கிழமை மூதலாவி மருதாசல நாடார், அக்கிராசனாதிபதி முருகண நாடார் இவர்கள் முன்னிலையில் "திண்டாமை" வி. ஜி. மாகாளியப்ப நாடார், "நமது கடமை" வி. எம். சென்னியப்ப நாடார், "ஒற்றுமை" டி. அப்புசாமி நாடார் ஆகியவர்களால் முறையே பேசப்பட்டு சங்கமினிதுகலைந்தது. சங்க மங்கலமாய் முடிந்தது போற்றத்தக்கது என்று ஸ்ரீமான் அப்புசாமி நாடார் எழுதுகிறார்.

## ஏது உத்தியோகக் கட்சி?

பிராமணர்கள் எனச் சொல்லப்படும் ஓர்சார்பாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஜாதிப் பிரிவினையால் அல்லாதாராகிய நாம் தாழ்ந்தவர்கள் என கருதப்படுகிறோம் ஆனால் இது யாருடைய குற்றம் என்று யோசித்துப்பாருங்கள். நாமே நம்மை இழிவு படுத்திக் கொள்ளுகிறோமே தவிர வேறில்லை. எவ்வாறெனில், நாம் பிராமணர்களைக் கண்டால் சுவாமி என்கின்றோம். என்னே அவர்கள் தெய்வமா? இவ்வித மௌட்டீகத் தனம் முதலில் நம்மை விட்டு விலக வேண்டும். இரண்டாவதாக நமது வீடுகளில் நடக்கும் கல்யாணம் முதலிய சுப காரியங்களுக்கு அவரவர் குல குருமார்கள் இருக்க அவர்களைச் சிறிதும் மதியாது பிராமணப் புரோகிதர்களை உயர்ந்த ஜாதியாரென்றும், தெய்வமென்றும் கருதி அவர்களைக் கொண்டு நடத்துகிறோம். என்னே நம் அறியாமை! இம் மூட நம்பிக்கை நம் மக்களிடமிருந்து எப்பொழுது ஒழிகின்றதோ அப்பொழுது தான் நாம் சுயமரியாதை வீரர்கள் என்று சொல்லுவதற்குத்தகுதியுடையவர்கள் ஆவோம். சுதந்திரம் பெறுவதற்கும், சுயராஜ்யம் அடைவதற்கும் தகுதியுடையவர்கள் எனச் சொல்ல முடியும். ஆனதால் சகோதரர்களே! இனிமேலாகிலும் யாவரும் அவரவர் குல குருக்களைக் கொண்டு வைபவங்களை நடத்தும்படி பன்முறை வேண்டுகிறேன். நம்மவரில் சிலர் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக் கட்சியென்று சொல்கிறார்கள். தற்போது சென்னை மாகாணத்தில் 100-க்கு பிராமணர்கள் 80 பேர் காங்கிரஸில் இருக்கிறார்கள். மிஞ்சியவர்கள் சுயேச்சைக் கட்சி என்கிறார்கள். காங்கிரஸிலுள்ள பிராமணர்களில் 100-க்கு 80 பேர் உத்தியோகத்திலிருக்கின்றார்கள். ஆனால் நம் நாடார் மக்களை எடுத்துக் கொண்டால் மொத்த ஜனத் தொகை 13 லக்ஷத்திற்கு 100-க்கு படித்தவர்கள் 10 பேரிருக்கின்றார்கள். இந்தப் படித்தவர்களில் 100-க்கு 80 பேர் ஜஸ்டிஸ் கட்சியிலிருக்கிறார்கள். மிஞ்சியவர்கள் காங்கிரஸிலும், சுயேச்சையிலுமிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள நம் மக்கள் 100-க்கு 3 பேர் கூட உத்தியோகத்திலிருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. இன்னும் பிராமணரல்லாதார் மொத்தத் தொகை பூராவும் ஜஸ்டிஸ் கட்சியிலுள்ளவர்களை எடுத்துக் கொண்டால் 100-க்கு 12 பேர்கள் உத்தியோகத்திலிருக்கிறார்கள் என்று சொல்லுவதுகூட கடினம் என்று நினைக்கிறேன். ஆனால் அதிகமாக உத்தியோகங்களில் பிராமணர்களிருக்கும்போது ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக்கட்சியென்பது தான் யாவருக்கும் வியப்பாயிருக்கிறது. ஆனதால் இனியாகிலும் அபிப்பிராய பேதங்களை ஒழித்து உண்மையை உணருங்கள். பிராமணர்களுக்கு நாட்டில் செல்வாக்கு ஏற்பட்டதற்குக் காரணம் கல்வியும், உத்தியோகமும் தான். உத்தியோகம் புருஷ லக்ஷணம் என்ற ஆன்றோர் வாக்கியத்திற்கிணங்க நம் மக்கள் உத்தியோகங்களைக் கைப்பற்றல் அவசியமான காரியமாகும். நம் மக்கள் கற்க சாதனமின்றித் தவிக்கின்றார்கள். அவர்களுக்கு நம் குல செல்வந்தர்கள் யாவரும் படிப்பதற்கு வசதிகளைக் கொடுத்து அவர்களை ஆதரிக்கும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

S. V. R. M. P. தனுக்கோடி
நாடார்.

### நமது லக்ஷியத்துக்கு முகமலர்ச்சியே தேவை.

ஒருவர்க்கும் ஒன்றையும்
இரவல் கொடுக்காதே;
தானம் செய்; விற்று விடு,
அல்லது நீயே அனுபவி.

லாபம்போல் நஷ்டமும்;
இரண்டிடத்தும
சந்தோஷமாயிரு.

## நாற்றிசை நடப்பு.

நடுத்தெருவில் சுட்டுக் கொல்லப்பட்ட அயர்லாந்து தேசத்து மந்திரி ஓஹிக்கின்ஸின் மனைவிக்கு 20000 பவுன் கொடுப்பதென பார்லிமெண்டில் முடிவாகியிருக்கிறது.

துருக்கி தேசப் பெண்கள் அந்நிய தேசத்தவர்களை மணந்து கொண்டபோதிலும் அவர்களின் சந்ததிகள் துருக்கியர்களென்றே கருதப்படுவார்களாம்.

மோட்டார் விபத்துக்கள் நிகழாமலிருப்பதற்காக, ஊமைகள் சிவப்பு நாடாக்களையும், செவிடர்கள் மஞ்சள் நாடாக்களையும், குருடர்கள் வெள்ளை நாடாக்களையும் தங்கள் தொப்பிகளிற் கட்டிக் கொள்ளவேண்டுமென்று, துருக்கி நாட்டுத் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஜென்னி என்பவர்—பிரிட்டனி கடிகாரம் செய்யும் தொழிலைக் கைக் கொண்ட ஒருவர் அவர் கடிகாரத்தைப் பார்க்காமலே, மணி சொல்லும் திறமை வாய்ந்தவராயிருக்கிறாராம். அவர் மணி சொன்னால் ஒரே ஒரு நிமிஷம் தான் முன் பின்னாக இருக்கிறதாம். இவ்விதம், கடிகாரம் பாராமலே, இவ்வளவு சரியாய் மணி சொல்லுவது சுமார் லட்சம் பேருக்கு ஒருவர்தான் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

நியாகரா ஆற்றின் தெற்குக் கோடியில் முகத்துவாரத்துக் கருகில் குறுக்கே, கானடாவுக்கும் அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்துக்குமான "சமாதானப் பாலம்" என்ற பாலத்தை, பிரிட்டிஷ் அரசகுமாரர் திறந்து வைத்தார். 100 வருஷமாக ஆங்கில நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் இருந்து வரும் சமாதானத்தின் ஞாபகார்த்தமாக இது திறக்கப் பெற்றதாம்.

சீனாவில் ஷாண்டங்கில் யுத்தம் மும்முரமாக நடக்கிறதாம். தேசியக் கட்சியின் படைத்தலைவரான சியாங் கெய்ஷேக்குக்குப் பலத்த வெற்றிகள் கிடைத்து வருகின்றனவாம். ஷாங்கையிலுள்ள ஒன்பது ஜப்பானிய ஆலைச் சொந்தக்காரர்கள் நஷ்டப்பட்டு அழிவெய்துவதை விட, மூடிவிட்டு 60,000 சீனத் தொழிலாளரை வேலையினின்று நீக்கிவிடுவதே நலமெனத் தீர்மானித்துள்ளார்களாம்.

கல்கத்தாவில் பிர்ஜிதாலாவினின்றும் வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்பெற்ற சிவலிங்கம் ஆகஸ்டு மீ 29 வ மறுபடியும் போலீஸாரால் பழைய இடத்திற்கே திருப்பிக்கொண்டுவந்து வைக்கப்பெற்றது. கிரமப்படியுள்ள கிரியைகளுடனேயே லிங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது.

பண்டித மோதிலால் நேரு இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு ஆகஸ்டு மீ 31 வ தீர்மானமாய் விட்டது. சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்தியக் காங்கிரசுக்கு விஜயம் செய்வதற்காக, அவர் டிசம்பர் மாதத் துவக்கத்தில் இந்தியாவுக்குத் திரும்புவார் என்று தெரிகிறது.

ராஜபாளையம் யூனியன் போர்டு உறுப்பினரான அப்பாவுத் தேவனின் மகளைத் தனது மகனுக்கு மணம் செய்து கொடுக்குமாறு காளிமுத்துத் தேவன் என்பவர் கேட்டதாகவும், முன்னவர் மறுத்து விடவே, பின்னவரின் மகன் முத்தையா தேவன் அப்பெண்ணை 1926 ஹு நவம்பர் மீ 28 வ திருடிச் சிவகிரி கொண்டு சென்றதாகவும் ராமநாதபுரம் செஷன்ஸ் கோர்ட்டில் நடந்த வழக்கில், ஜட்ஜி எதிரிக்கு மூன்று வருடக் கடின காவலும், 300 ரூபாய் அபராதமும் விதித்தார் என்று தெரிகிறது.

டொக்கியோ நகரத்திலுள்ள ஒரு மனிதன் 35 வருடங்களாக வெறும் புல்லையே உணவாகக்கொண்டு ஜீவித்து வருகின்றானாம். உற்சாக முடையவனாகவேயிருப்பதோடு வயது 79 ஆகியும் பற்கள் நன்றாய் வேலை செய்கின்றனவாம்.

## உலகப் பிரளயம்.

உட்ரெச்ட் என்னுமிடத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்ட்ராபிஸ் மஸ் மிகப் புராதனமான கையெழுத்து ஏட்டுப் பிரதி யொன்றைக் கண்டுபிடித்திருப்பதாயும், அந்த ஏட்டுப் பிரதியில் சீனாவிலுள்ள மகத்தான சுவர் உலகப் பிரளயத்தைக் குறித்து இங்கிலாந்துக்கு எச்சரிக்கை செய்வதன் பொருட்டுத் தான் கட்டப்பட்டதென்பதை நிரூபிக்கத்தக்க விவரங்கள் நிறைந்திருப்பதாயும் சொல்லப்படுகின்றது. இதன் சம்பந்தமாக விநோதமான பல கணக்குகளும், வியாக்யானங்களும் எழுதப்பட்டிருக்கின்றனவாம். சீனாவின் சுவற்றின் உயரத்தை ஆங்கிலக் கணக்கின்படி எத்தனை அடிகளென்று அளந்து கொண்டு, அத்தொகையை 1927 ஆல் பெருக்கி, 161 ஆல் வகுத்து, அத்தொகையை இரண்டால் பெருக்கி ஒருவர் முதலில் நினைக்கும் தொகையைக் கழித்துவிட்டு அவ்வாறே திரும்பத் திரும்பப் பல தடவைகளில் கணக்குப் போட்டுப் பார்த்தால் வியக்கத்தக்கவாறு 371824 கிடைக்குமாம். இத்தொகை 1938 ன் கோடு நம்பர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆதலால் 1938-ம் வருடம் இங்கிலாந்துக்கு ஏதோ ஆபத்து இருக்கின்றது என்று இவ்வளவுடன் டாக்டர் ஸ்ட்ராபிஸ் மஸ் தமது ஜோசியத்தை நிறுத்திக் கொள்ளுகின்றார்.

## திருமலைராயன் பட்டணம்.

இவ்வூர் நாடார்கள் பொது ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் வேம்பினடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கீர்த்தவ மாகாளியம்மனுக்கு நாளது ஹு ஆடி மீ 27வ மகாசத்திரகம் ஆவாகனம் நடத்தி ஐந்து நாள் உற்சவமும் வெகு சம்பிரமமாய் நடைபெற்றது. அநேக பக்த கோடிகள் வந்து தெரிசித்து சத்தியருள் பெற்றேகினர். காவடி, கோலாட்டம், கச்சேரி, பஜனை ஆகிய பலவித மங்களகர வைபவங்களும் வெகு இங்கிதமாய் நடைபெற்றன. நிற்க, ஷை பராபரிக்கு திருப்பணி வேலை முடிவு பெறவேண்டியிருப்பதாலும், இவ்வூர் நம்மவர்கள் போதிய பணவுதவி செய்யப் போந்தவாறின்றி யிருப்பதாலும் கண்ணியம் பொருந்திய தனதனவான்களின் பொருள் சகாயத்தை மிகவும் நாடியிருக்கின்றோம். ஆகையால்தெய்வ கைங்கர்யம் சிறப்புடன நடைபெற பொருளீட்ட வேண்டுகின்றனன்.

பெ. சங்கர நாடார்,
கடலைக்கடை.

## தஞ்சாவூர்.

தஞ்சையில் வாழ்ந்திலங்கும் க்ஷத்திரியகுல நாடார்களே! கவனியுங்கள். நீங்கள் பால்ய நாடார் சங்கம் ஒன்று ஏற்படுத்தி அதற்கு 12 முறைகாரர்களும், ஒருவரை நாட்டாண்மையாகவும் நியமித்து மாதாந்தரக் கூட்டம் கூட்டி தலைக்கட்டு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு அணா 2½ ஆக மகமை வசூலித்து நடத்தினீர்கள். அதை இலப்பமாக நிறுத்தி விட்டீர்கள். இனிமேலாவது ஷை சங்கத்தை மறந்துபோகாமல் சீர்திருத்தி நடத்துவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சு. முத்துகாமாக்ஷிபாண்டியன்,
வா. பழனிச்சாமி பாண்டியன்,
தஞ்சாவூர்.

(6-ம் பக்கத்தின் தொடர்பு.)

சொல்லியனுப்புங்கள். டாக்டர் திருமலாச்சாரியிடம் போய் பல்லுக்கு மருந்து போடவேண்டும். போதும போதும் காங்கிரஸ வேலை. தொண்டர் வேலைக்கு வேறே யாரையும் பார்த்துக் கொள்ளுமென்றார்.

கிருஷ்ணய்யங்கார்—அண்ணா! மன்னிக்க வேண்டும். தாங்கள் கோபிக்கக் கூடாது. தங்கள் சொற்படியே சத்தியமூர்த்தியை அனுப்பிவிடுகிறேன்.

(போகிறார்.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

சேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்துப் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்றா வெளியை மனவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

பிரபவ ஹு ஆவணி மீ உ௰ உ

## மதாச்சாரம்.

ஜீவவர்க்கங்களிற் சிறந்த மனித சமூகம் ஒழுங்குகள் குறைந்து தன்னிலே கெட்டுப்போய் விடாமல் ஒரு கட்டுப்பாடுடனே வாழ்வதற்காகத்தான் மதம் என்ற பெரிய ஸ்தாபனத்தை யுண்டு பண்ணி வைத்திருக்கிறார்கள். குதிரையையும் யானையையும் அதனதன் கையாலும் அங்குசமும் அதனதனை எப்படி நேரானவழியிற்போகும்படி செய்கிறதோ அதுபோல் மனிதர்களை அவரவர்கள் மதம் நேரான மார்க்கத்தில் நடத்திவந்திருக்கிறது— வருகிறது. அதன் பொருட்டு அவர்கள் உயிரையும் பொருட்படுத்துவது கூட இல்லையென்றால் அதன் மகத்துவத்தைச் சொல்லவும் வேண்டுமா? மதங்களை உண்டுபண்ணிய மகாத்மாக்கள் அவ்வளவு மேலான தியாகிகளாய் தனக்கென வாழாதிருந்து உடலை வருத்தி அற்புதமான தவப்பேற்றை யடைந்து தெய்வானுக் கிரகத்துடன் சேகரித்த பெரும் பொக்கிஷமேயாம். மதத்தின் பேரில் ஆணையிட்டு ஒருவரைக் கட்டுப்படுத்தி விடலாம். அதுவொரு பொதுவான ரிஜிஸ்டர் செய்த பத்திரம்போற் கருதலானர்கள். மதம் எதைப் போதிக்கின்றதோ அதை விட்டொருபடியேனும் முன்பின் போகவியலாது. அவ்வளவு மேன்பாடுள்ள மதங்கள் உலகத்தில் எத்தனையோ தோன்றி மறைந்துகொண்டிருந்தாலும் தற்போது உயிருள்ள மதங்களாக மூன்று (இந்து கிறிஸ்து, முஸ்லீம்) தான் நிலைபெற்றதா யிருக்கின்றன வென்று சுவாமி விவேகாநந்தர் கூறியிருக்கிறார்.

தற்போது இம்மூன்று மதங்களும் பொதுவாக க்ஷீணதசையடைந்துகொண்டே வருகின்றன. மதாச்சாரப்படி நடக்கிற ஜனங்கள் குறைந்து பேருக்கு மாத்திரம் மதத்தை வைத்துக்கொண்டு சம்போகில் நடக்கிற ஜனங்கள் அதிகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மதாச்சாரப்படி நடக்கும் ஜனங்கள் குறையக் குறைய மதத்தின் மகத்துவங்களும் குறைந்து வருகின்றன. அதன் விதிப்படி யொழுக முடியாத ஜனங்கள் அதை எப்படி பலப்படுத்த முடியும்? எல்லா மதங்களிலும் சிறந்தது இந்துமதமென்று சுவாமி விவேகாநந்தர் உலகயாத்திரை செய்து நிர்சித்துவந்தார். இப்போது இந்துமதத்திலுள்ள சில கொடுமையாளர்கள் கோட்பாட்டினாலே மதமே நசித்துப்போகுமோ வென்ற பயத்தால் இந்துமகாசபையென்ற ஒரு கோட்டை கட்டும்படி நேர்ந்துவிட்டது.

கமால் பாட்சாவோ முஸ்லீம் மதத்தை அரசாங்கத்திலிருந்து அடியோடு மாற்றிவிட்டார். மதக்கோடிணைத்த பல கொள்கைகளையும் மாற்றிவிட்டார். பெண்களையும் சைன்யாதிபதிகளாக்கி விட்டார். இந்திய முஸல்மான்கள் மதத்திற்கு நிகழ்த்துவிடக் கூடாதென்பதில் மிகுந்த அக்கரையுடையவர்களாயிருந்து வருகிறார்கள். என்றாலும் மதாச்சாரப்படி நடக்கிற முஸல்மான்கள் ஒரு சிறிது பேர்கள் தான் இருக்கக்கூடுமென்றும் ஆகவே எல்லோரும் மதத்தை மதித்துநடக்க வேண்டுமென்றும் அவர்கள் பத்திரிகைகள் உபதேசித்துக் கொண்டுவருகின்றன.

மேல்நாட்டினரும் உலகத்தையெல்லாம் அடக்கியாள வேண்டுமென்ற பேராசையினாலே அவர்கள் கவனமெல்லாம் யந்திரங்களிலும் யுத்த தந்திரங்களிலும் போய்ச் சிக்குண்டு கிறிஸ்து மதத்தை மறந்துவிட்டார்கள். மதாச்சாரங்கள் குறையவே சாதாரண ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களென்று மகாத்மாவுக்கு ஒருவரெழுதியிருக்கிறார். பாவத்திற்கு சம்பளம் மரணம் என்று பைபிள் கூறுவதை மறந்து முதலாளிகள் தொழிலாளிகளிடம் நடந்துகொள்கிறார்கள். இதனாலே நிலத்தை சகலருக்கும் பொதுவென்று ராஜ்ய விதியாய்ச்செய்துவிடவேண்டுமென்ற (ஸோஷியலிஸ்ட்) கக்ஷி ஒன்று ஏற்பட்டிருப்பது நியாயமென்று கருதுகிறார்கள். மிருகத்தனமான யுத்தங்களேற்பட்டு கிறிஸ்தவ மதப்பெருமை குறைவுபட்டதென்று அநேகர் கருதுகிறார்கள். இயேசு மரித்து இருபத்தைந்து வருஷங்களுக்குப்பின் தாமஸ் என்னும் மகானால் பிரபஞ்சத்தில் மிகப் பரிசுத்தமான கிறிஸ்தவர்கள் இந்தியாவில் உண்டுபண்ணப் பட்டார்களென்றும், ஆங்கிலோஸாக் ஸோனியர் காட்டுமிராண்டிகளாய் சரீரங்களிலே பச்சைகுத்திக்கொண்டு குகைகளிலே வசித்துவந்த ஒரு காலத்தில் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் முப்பது லக்ஷம் பெயர்களிருந்தார்களென்றும் சொல்லப்படுகிறது. இதனால் அக்காலத்திலும் மதாச்சார ஒழுங்குதவறு நிலைமையில் இந்தியாவில் கிறிஸ்துவின் மேன்மை பிரகாசித்து வந்திருக்கிறதென்பது நன்கு விளங்குகிறது. விலைக்கு வாங்கினவர்களையும் விற்றவர்களையும் கோயிலிலிருந்து இயேசு வெளியே துரத்தினாரென்று பைபிளில் படித்துவிட்டு உலகத்தையே போஞ்செய்யப் பார்ப்பதால் நிலைமை கெட்டுவிட்டதென்று உண்மையான கிறிஸ்தவர்கள் உடலுருகுகிறார்கள்.

நாடார்களைப் பற்றிப் பார்ப்போம். நாடார் சமுகத்தில் கிறிஸ்தவர்களும் பெரும்பாலிருக்கின்றனர். இந்துக்களும் மற்றவர்களைவிட அதிகமாயுண்டு கிறிஸ்தவ நாடார்களில் பணக்காரர்களும் படித்த உயர்தர உத்தியோகஸ்தர்களும் சரியானபடி கோவிலுக்குப் போகிறதில்லை யென்றும், ஞாயிற்றுக்கிழமையிலுங்கூட அவர்களில் அநேகர் ஆலயங்களுக்குப் போவதில்லை யென்றும், இதைக் கண்டு சாதாரண ஜனங்களும் அம்முறைகளை அனுஷ்டிக்கப்பார்க்கிறார்கள் என்றும், இதனால் அவர்களுக்குள் மத வைராக்கியம் குறைந்து போகிறதென்றும் கிறிஸ்தவநாடார் நண்பர்கள் மூலம் அறிகிறோம்.

இந்து நாடார்களிடத்திலும் ஸ்நானபானம் நேமம் நிஷ்டை முதலிய மதாச்சாரவிதிகள் குறைந்துபோய்விட்டன இதனால் அவர்கள் பலமும் ஆயுள்விர்த்தியும் குறைந்து வருகின்றனவென்பதை அறியவில்லை. கல்யாணக் காலங்களில் வரன்முறையின்றிச் செலவுசெய்து டாம்பீகத்தைப் பெருக்கிவிட்டு, இப்போது தம்பதிகளை கோயிலில் வைத்து தாலிகட்டிவிட்டால் செலவினங்குறையுமாவென்று நோக்குகின்றார்கள். பழையமுறைகளைக் கைக்கொண்டால் செலவினங் குறையுமென்பது அறிவாளிகள் அறியாத விஷயமல்ல. அநேகர் அமாவாசை கார்த்திகை வரும் நாளறியாதவர்களாயிருக்கிறார்கள். அன்றொரு சந்தியிருப்பவர்களிலனேகர் விசேஷமாய் நாலு சந்தியிருப்பது நன்றெனக் கருதுபவர்களுமிருக்கின்றார்கள். மதாச்சாரத்தில் சுகாதாரமும் ஆயுள்விருத்தியும் நல்ல சுகமுமுண்டென்பதை பலர் அறியாமலிருக்கின்றார்கள். ஒவ்வொரு தினத்திலும் அனுட்டிக்கவேண்டியமுறை கடினமாயிருக்குமென்று கருதுபவர்கள் வாரம் மாதம் முதலியவைகளிற் செய்யவேண்டிய கிரிகைகளைச் செய்யலாமன்றோ? சித்திரை பௌர்ணை, வைகாசி விசாகம், ஆனி திருமஞ்சனம், ஆடி அமாவாசை, பதினெட்டாம் பெருக்கு, ஆவணி ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி, புரட்டாசி மகாநவமி, மாளய அமாசை, சனிவாரம், ஐப்பசி கந்தசஷ்டி, தீபாவலி, கார்த்திகை சோமவாரம், திருக்கார்த்திகை, மார்கழி, திருவாதிரை, ஏகாதசி, தை சங்கராஜயந்தி, மாசி மகாசிவன்ராத்திரி, பங்குனி உத்திரம் முதலியனவும் மற்றும் பல நாயன்மார், திருநட்சத்திரங்கள் ஒவ்வொன்றிலேனும் கிரிகைகளும் நடத்தவேண்டிய பிரகாரம் நடத்துவது முடியாத காரியமல்ல வென்பதை சகலரும் உணரவேண்டும். உலகத்திலே சர்வஜனங்களும் தத்தம் மதாச்சாரப்படி நடக்குஞ் சித்தமுண்டாகுமேல் சர்வ நன்மைகளும் தானேயுண்டாகு மென்று நம்புகின்றோம்.

---

### நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### அறிவிப்பு.

அபிமானிகளே!

கும்பகோணத்தில் நடைபெறப்போகும் 11-வது கான்பரன்ஸில் நமது குல முன்னேற்றத்துக்காதாரமான விஷயங்களை ஆலோசனைக்குக் கொண்டுவரவும், தீர்மானம் செய்யவும் விருப்பமுடைய கனவான்கள் 15—9—27க்குள் மேற் கண்ட விலாசத்துக்குத் தீர்மான ரூபமாக அனுப்பிவைக்கக் கோருகிறோம்

காரியதரிசிகள்.

---

### மன்றல் அழைப்பு.

ஐயா!

பரம தயாநிதியாகிய தெய்வ கிருபையை முன்னிட்டு நாளது மங்களகரமான 7—9—27 புதன்கிழமை யன்று எனது கனிஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி தமயந்தி அம்மாளை அருப்புக்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ ராம. சே. தங்கையா நாடாரவர்கள் ஜேஷ்ட குமாரர் செல்வச் சிரஞ்சீவி இராமசாமி நாடாருக்கு விவாகம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் கனதனவான்கள் யாவரும் அவ் வைபவத்திற்கு விஜயஞ்செய்து சிறப்பிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

சு. ஆ. முத்து நாடார்,

பத்திராதிபர்.

---

### திருமண நன்கொடை.

(1) தூத்துக்குடி பேங்கர் மகா-ா-ா-ஸ்ரீ மா. வயி. காசிச்சாமி நாடார் அவர்களது தமையனார் மகா-ா-ா-ஸ்ரீ வயிரவநாத நாடார் அவர்கள் திருக்குமாரர் வயிரவநாதனவர்களுக்கும், மதுரை மகா-ா-ா-ஸ்ரீ வெ. பெ. இரத்தினசாமி நாடார் அவர்கள் குமாரத்தி திருவளர் செல்வி ராஜமணியம்மாளுக்கும் நாளது மங்களகரமான ஆவணி மீ 22 உ நடைபெறவிருக்கும் திருக்கல்யாண வைபவத்தை முன்னிட்டு மணமகளைச் சார்ந்த மகா-ா-ா-ஸ்ரீ மா. வயி. இரத்தினச்சாமி நாடார் அவர்கள் நமது மித்திரனுக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபாய் ஐந்தையும் அன்பாக மிகப் பெருமையோடு ஏற்று இன்புற்றனம்.

2) கமுதி. மகா-ா-ா-ஸ்ரீ கு. ஊருணிநாடார் அவர்கள ஜேஷ்ட புத்திரர் குழந்தைவேல் பாண்டியருக்கும், மகா-ா-ா-ஸ்ரீ பழ. அ. அருணாசல நாடாரவர்கள் திருக்குமாரத்தி சௌபாக்கியவதி இரத்தினம்மாளுக்கும் நாளது மங்களகரமான ஆவணி மீ 22 உ நடைபெற விருக்கும் திருமண வைபவத்தை முன்னிட்டு மகா-ா-ா-ஸ்ரீ கு. ப. கு. பிர்மானந்த சக்கிரவர்த்தி நாடார் அவர்கள் அனுப்பிவைத்த ரூபாய் ஒன்றையும் மிகப் பெருமையோடு வரப்பெற்றோம்.

(3) மலேயா நாட்டில் நமது மித்திரனுக்குத் தோன்றாத் துணையாயிருப்பவரும், பல பொது ஸ்தாபனங்களுக்கு மனமுடன் பொருளீட்டும் ஈகையாளரும், மகா பக்திமானும், ஜாதிய அபிவிருத்தில் சதா கவனமுள்ளவருமான செகலுக்கான்சன் மகா-ா-ா-ஸ்ரீ ம. அ. பொன்னுச்சாமி நாடார் அவர்கள், தமது தமையனார் மகா-ா-ா-ஸ்ரீ குமாரசாமி நாடார் அவர்கள் திருக்குமாரர் ராசு நாடாருக்கு மங்கலனூரில் நாளது மங்களகரமான ஆவணி மீ 23 உ திருமணம் நடைபெறுவதாக மித்திரனுக்கு அழைப்பு அனுப்பியிருப்பது கண்டு மிகவும் மகிழ்வெய்துகின்றோம்.

(4) விருதுநகர் பிரபல வியாபாரியும், முனிசிபல் கௌன்ஸிலருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ சிவ. பெ. நா. சிதம்பர நாடாரவர்கள், தமது குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ தங்கமணிநாடாரவர்களின் ஜேஷ்ட புத்திரர்சுஞ்சரபாண்டியருக்கும், கூடையூர் மகா-ா-ா-ஸ்ரீ ப. அ. அய்யம்பெருமாள் நாடாரவர்களின் புத்திரி சௌபாக்கியவதி ராஜரத்தினம்மாளுக்கும் நாளது மங்களகரமான ஆவணி மீ 23 உ நடைபெறப்போகும் திருமாங்கல்யதாரணத்தை முன்னிட்டு நம்மித்திரனுக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபாய் மூன்றையும் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டோம்.

மேற்கண்ட மித்திராபிமானிகள் நமது மித்திரன் பால் கொண்ட அன்புக்கு யாம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருத்தலோடு திருமணம் இனிது முடிவெய்தி தம்பதிகள் அஷ்ட ஐசுவரியங்களும் பெற்றின்புற சர்வ வல்லமையுள்ள கடவுளை இறைஞ்சுகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# உலகியல்.

## அர்த்தமற்ற மதச் சடங்கால் இந்நிலையானோம்.

ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியாரின் உபந்நியாசத்தின் சாரம்:—

இந்தியநாட்டில் ஸ்திரீ புருஷர்கள் எவ்வளவு சுறு சுறுப்பாக விருக்க வேண்டுமோ அவ்வளவு சுறு சுறுப்பாக விருக்கவில்லை. இதற்கு நமது தேசத்தின் தற்கால நிலைமை காரணமா, அல்லது நமது வாழ்க்கை முறை காரணமா, அல்லது நமது மதம் காரணமா வென்று கவனிக்கவேண்டும். லௌகீக வாழ்க்கையிலும் சரி பாரமார்த்திக வழியிலும் சரி இவ்வப்பொழுது நாம் எந்நிலையிலிருக்கிறோமென்பதைக் கவனிக்கவேண்டும். ஒரு மதம் சிறந்ததென்றால் அது உண்மையானதாகவும், சரியான வழிகாட்டுவதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கை என்பது அவரவர்களிஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் நடத்தப்படலாம். ஆஸ்டிரேலிய வாசிகள் மிக வும் சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் வாழ்க்கையை நடத்துகின்றனர். இருந்தாலும் தங்கள் கடமைகளை அவர் செய்யத் தவறுவதில்லை. விடு முறைகளைக் குதூகலங்களில அவர்கள் செலவழிக்கின்றனர். இந்தியாவில் இப்பொழுது அர்த்தமில்லாமலும் பொருந்தாமலும் மதச்சடங்குகள் அனுஷ்டிக்கப் பட்டுவருகின்றன. மதத்திற்கு அடிப்படையான தத்துவங்கள் என்ன வென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும். ஸத்தியம், ஒழுக்கம், தைரியம் இவைதான் மதத்திற்கு அடிப்படையான விஷயங்கள். மற்றப்படி சந்தர்ப்பத்திற் கொவ்வாத ஆசாரங்களை வைத்துக்கொண்டிருக்கும் மதம் சிறிதும் பிரயோசனப்படமாட்டாது, இப்பொழுது உலகிலுள்ள அநுபவங்களை நாம் முழுவதிலும் பெற வேண்டும். மேனாடுகளைப்போல் இங்கும் கூட்டமாகக் கடவுள் வழிபாடு செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

## நாஸ்திகத் தன்மையால் யாது பயன் ?

மைசூரில் மகாத்மா காந்தியடிகள் மாணவர்கள் பாலுரைத்த மொழிகள் வருமாறு:—

"கடந்த பத்து ஆண்டுகளுள் ஆயிரக் கணக்கான மாணவர்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் தங்களது அந்தரங்கங்களை எல்லாம் என்னிடம் நம்பிக்கையாகத் தெரிவித்திருக்கின்றனர். உங்களது சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்ள முயற்சிப்பேன். எனது அனுபவத்தினால் நான் அறிந்து கொண்டுள்ளவற்றை நான் உங்களுக்குத் தெரிவிப்பேன். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையென்பதை நீங்கள் அறியவேண்டும். ஒரு மனிதனுக்குக் கடவுளிடத்திலுள்ள நம்பிக்கை அற்றுப்போமாயின் அதைவிடப் பெரிய தண்டனையோ அல்லது துன்பமோ அவனுக்கு வேறு வேண்டுவதில்லை. மாணவர் உலகத்தில் கடவுளிடம் உள்ள நம்பிக்கை வரவரக் குறைந்து வருகிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கின்றேன். ஓர் இந்துச் சிறுவனிடம் ராமநாமம் ஜெபிக்கச் சொன்னால் அச்சிறுவன் ராமன் யாராயிருக்கலாம் என என்னை நோக்குகிறான். குரானை ஓதும்படியும் கடவுளுக்குப் பயந்து நடக்கும்படியும் ஓர் மகமதியச் சிறுவனிடம் கூறினால் அவன் குரானைப் படிக்கும் ஆற்றல் தனக்கு இல்லையென்று ஒப்புக்கொள்ளுகிறான். அவன் அல்லா என்பதெல்லாம் வெறும் வாய் வேதாந்தமல்லாமல் உண்மையானதல்ல. கல்விக்கு முதலாவதாகக் களங்கமற்ற மனதை அடையவேண்டும் என்பதை இச்சிறுவர்கள் எப்படி நம்புமாறு நான் செய்யமுடியும்? நீங்கள் பெறும் கல்வி கடவுளிடம் உள்ள நம்பிக்கையை அகற்றுமாயின் அக்கல்வியால் நீங்கள் யாது பயன் பெறப்போகின்றீர்கள் என்பதையும் உங்களால் உலகிற்கு யாது பயன் ஏற்படப்போகின்றது என்பதையும் நான் அறியக்கூடவில்லை. மனிதவர்க்கத் தாருக்குத்தொண்டு செய்வதன் மூலம் கடவுளைக்காண நான் முயலுகிறேன் என்று உங்கள் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது உண்மையே. ஏனெனில் கடவுள் வானுலகிலுமில்லை, கீழ் உலகிலுமில்லை என்பதையும், இந்துக்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அல்லது பஞ்சமர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஆடவர், பெண்டிர் ஆகிய அனைவரிடத்திலும் இறைவன் இருக்கின்றார் என்பதையும் நான் நன்கு அறிவேன்."

---

## இந்துமத தர்மம் என்ன ?

மகாத்மா பெங்களூரில் ஆதிகர் நாடார்கள் முன்னிலையில பேசியதாவது:—

"நான் உங்களைச் சந்திக்கும் பொழுது எனக்குச் சந்தோஷமும் துக்கமும் ஏற்படுகின்றது. உங்களைச் சந்தித்து என்னைப் புனிதப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் நேர்ந்தது குறித்துச் சந்தோஷமடைகிறேன். நீங்கள் கேவலமான நிலையில் இருந்துவருவது எனக்கு நன்கு தெரிந்திருந்த போதிலும சுகாதார வசதிகளை முன்னிட்டும் பிற காரணங்களை முன்னிட்டும் நான் அரண்மனைகளில் தங்க வேண்டியவத நிலைக்கையில் துக்கம் ஏற்படுகின்றது. என்னுள் உள்ள கடவுள் ஒவ்வொரு கணமும் நான் வசிக்கவேண்டிய இடம் அரண்மனைகளில் அல்லவென்றும் உங்கள் மத்தியிலேதான் என்றும் கூறிக்கொண்டிருக்கிறார். தற்பொழுது ஏற்படும் தியாக உணர்வு தற்காலத்திற்கு மட்டும் இருந்தாலும் இருக்கலாம். இவ்விடத்தைவிட்டுச் சென்ற கணமே உங்களையும் உங்கள் குடிசைகளையும் பற்றிய கவலை உடனே இல்லாமல் போயினும் போகலாம். நான் பெரிதும் விரும்பும் செயலைச் செய்யக் கடவுள் எனக்குப் போதியபலத்தைக் கொடுக்கும் காலம் வரும்என்று எண்ணுகின்றேன். உங்களது முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஊழியர்களின் தொகை வர வர அதிகப் பட்டுக்கொண்டே வருகிறது என்பதை உங்களுக்குத் தெரிவிக்கவே இங்கு வந்துள்ளேன். தீண்டாமை எனும் மாசு இந்த மதத்தினின்றும் கூடிய சீக்கிரம் அகற்றப்படுமென்பது எனது திடமான நம்பிக்கை. கடவுள் முன்னிலையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு கிடையாது. மற்றவரை விட தாம் உயர்ந்தோர் எனக்கருதுவோர் அறிவிலிகள் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்துக்களாக உள்ள உங்களுக்குப் பசுப்பாதுகாப்புக் கடமையாயிருக்க மாட்டிறைச்சியும் அழுகிய மாமிசமும் தின்பதெவ்வாறு? வைதீகர்களை உங்களோடு கலந்து உறவாடும்படி செய்வதில் எனக்குப் பெரிதும்கஷ்டம் ஏற்படுகின்றது. ஏனெனில் நீங்கள் மாட்டிறைச்சி சாப்பிடுகிறீர்கள் என்றும் மதுவகைகள் அருந்துகிறீர்கள் என்றும் கூறுகின்றனர். எனவே நீங்கள் அவைகளை விடுத்து புனிதத் தன்மை பெற்றால் எனதுவேலை சுலபமாகும். இவ்விஷயங்களில் தீண்டத்தக்கார் எனக் கூறப்படுவோர்கள் உங்களைவிட மேலானவர்களல்ல என்று கூறுகிறீர்கள். அவர்கள் மேலானவர்கள் அல்ல என்பதை நான் அறிவேன்; எனினும் அவர்கள் தங்களது செருக்கால் அவ்வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கமாட்டார்கள். 'அவர்களைப் போல் நீங்கள் நடிக்கவேண்டாம். நீங்கள் உங்களது நிலையை உயர்த்திக் கொள்ள வேண்டும். எனவே உங்களை நீங்களே பரிசுத்தம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வீர்களாயின் உலகிலுள்ள எந்த சக்தியும் உங்களது முற்போக்கினைத் தடைசெய்ய முடியாது."

---

## பார்ப்பனரின் சூட்சிகள்.

முன்னொரு தடவை பார்ப்பனரின் சாமர்த்தியத்தைப்பற்றிக் கூறினோம். இப்பொழுது அச் சாமர்த்தியத்தினால் அவர்கள் செய்துள்ள சூட்சிகளைப் பற்றிக் கவனிப்போம்.

சூட்சிகளென்றால் அவைகளை சாமான்யமான சூட்சிகளாகச் சொல்ல முடியாது. எவரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாத சூட்சிகளாகும். மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும் மிகுந்த எச்சரிக்கையுடனும், முன்னேற்பாடுடனும் செய்யப்பட்ட சூட்சிகளாகும். ஆகையினாலேயே அவர்கள் செய்திருப்பதெல்லாம் சுயநலங்கொண்ட சூட்சிகளென்று நாம் அறிந்து கொண்டாலும், அவைகளிலிருந்து விலகுவில் தப்புவதற்கு முடியாதவர்களாயிருக்கின்றோம்.

இது விஷயத்தில் நாட்டார் உண்மையை உணர்ந்து கொள்ளும்படி செய்தது பார்ப்பனரல்லார் இயக்கமே என்று சொன்னால் அது மிகையாகாது. அதோடு அவ்வியக்கத்தில் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர் முதலியோர் சேர்ந்ததிலிருந்து ஜனங்கள் தங்கள் சுயமரியாதையைப் பெறுவதற்கு வழிதேட ஆரம்பித்து விட்டார்கள். சர்க்கார் உத்தியோகங்களுக்கு மாத்திரம் சண்டை போட்டுக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை என்பதை நன்கு தெரிந்து விட்டார்கள். அந்நியர்களின் ஆதிக்கத்தை விட பார்ப்பனரின் ஆதிக்கம் மிகுந்திருப்பதை உணர்ந்து கொண்டார்கள். இது நிற்க,

பார்ப்பனர் நம்மில் (பார்ப்பனரல்லாரில்) சிலரை (பஞ்சமரென்று சொல்லப்படுவோரை) மனிதர்களென்றே கருதுவதாகத் தெரியவில்லை. அதாவது, தாங்கள் வசிக்கும் தெருக்களின் (அக்ரகாரங்களில்) அவர்களை நுழைய விட மாட்டார்கள்; சில இடங்களில் அவர்களைப் பார்க்கவும் சகிக்கமாட்டார்கள். நாம் இதைச் சற்று நிதானமாய் யோசித்துப் பார்ப்போமானால் இது எவ்வளவு கொடுமையான காரியமென்பதை உணர்வோம். இதைப்பற்றி பார்ப்பனரிடம் விசாரித்தால் சாஸ்திரங்களில் அவ்விதமே கூறியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதில் தான் ரகசியமிருக்கிறது. இவ்வளவு கொடுமையானதும் இரக்கமில்லாததுமான விஷயம் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறதென்றால் இதை யாரேனும் நம்ப முடியுமா? கூறியிருந்தாலும் அதன்படி இணங்கி நடக்க முடியுமா? சாஸ்திரங்களெல்லாம் ஆதியில் கடவுளே உற்பத்தி செய்தார் என்று சொல்லுகிறார்கள்! அப்படியானால் கடவுள் என்பவர் அவ்வளவு கொடும் பாதகனா? இரக்கம் என்பது கொஞ்சமுமில்லாதவனா? மற்றவர் கண்களில் தென்படுவதற்கும் யோக்கியதையில்லாத இவர்களை (பஞ்சமர்களை) மற்றவர்களுக்காக வயல்களில் உழைப்பதற்கு மாத்திரம் கடவுள் அனுமதிக்கிறாரா? இதென்ன! அறியாமையன்றோ?

பார்ப்பனரின் ஆதிக்கம் அவர்களின் தெருக்களோடு மாத்திரம் நின்று விடுகிறதா என்று பார்த்தால் அது தானுமில்லை; ஊருக்குள் வந்து மெல்ல மெல்ல ஒவ்வொருவருடைய இல்லத்திற்குள்ளும் நுழைந்து விடுகிறதே! அதற்குக் காரணமென்ன? அவர்கள் செய்துள்ள சூட்சிகளேயன்றோ?

நம் வீடுகளில் கலியாண விசேஷம் ஏற்பட்டால் அதை இப்பார்ப்பனரே வந்து நடத்தி வைக்க வேண்டுமாம்! மற்றைப் பெரியோர்கள் நடத்தி வைத்தால் கலியாணம் நடவாதோ? நன்றாய நடந்தேறும். ஆனால் சாஸ்திர சம்மதமாக அதற்கு அதிகாரம் பெற்றவர்கள் இப்பார்ப்பனர்கள் தானாம்! இதென்ன விநோதம்! மற்றைப் பெரியோர்கள் யாரும் நடத்தி வைக்கலாமென்றால் பார்ப்பனரின் பிழைப்பு கெட்டுப் போகும் என்பதை சாஸ்திரங்கள் நன்கு அறிந்திருக்கின்றனவே!!

மனிதர்களாய்ப் பிறந்த நாமெல்லோரும் (பார்ப்பனர் உள்பட) அறிந்தோ அறியாமலோ பாவங்கள் செய்வது சகஜமேயாகும். ஆனால் நம் சாஸ்திரங்களில் அப்பாவங்களுக்கு பரிஹாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன; அதாவது, பார்ப்பனர்களுக்கு தானங்கள் செய்ய வேண்டுமென்பதே. இதென்ன பக்ஷபாதம்! பார்ப்பனர் செய்யும் பாவங்களுக்கு மாத்திரம் பரிஹாரங்கள் சொல்லாது விட்டுவிட்டது நியாயமான சாஸ்திரங்கள் தானா? பார்ப்பனரல்லாத ஏழை மக்களுக்கு தானங்கள் செய்தால் பாவமாமோ? பின்னை ஏன் அவர்களைப் பற்றி சாஸ்திரங்கள் மறந்து விட்டன? எல்லாம் பார்ப்பனரின் சூட்சிகளே.

நம்மவர்களில் அநேகர் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து வீடுகள் கட்டுகின்றனர். ஆனால் அவைகளில் குடிபுகுவதற்கு முன் புண்ணிய தானம் செய்வதற்கென்று பார்ப்பனர்களையே எதிர் பார்க்கின்றனர்! இதைவிட அவமானமும் அறிவில்லாத்தனமும் வேறென்ன விருக்கின்றது?

இவைகளெல்லாம் போகட்டும்; இன்னம் பெரிய பெரிய மோசங்கள் எத்தனையோ இருக்கின்றன. நம் காலஞ்சென்ற முன்னோர்களின் ஆத்மாக்கள் நற்கதி யடைய வேண்டுமெனபதற்காக இப்பார்ப்பனர் எடுத்துக் கொள்ளும் சிரமத்தை என்னென்றுரைப்பது? ஆஹா! எவ்வளவு தயாள குணம்! எவ்வளவு அபூர்வ சக்தி!! பிதுர்க்களை நரகத்திலிருந்து மீட்பவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாயிருக்க வேண்டும்!!! சாதாரண மனிதர்களால் ஆகக்கூடிய காரியமல்லவே. ஆனால் ஒரு சந்தேகம்; பார்ப்பனரின் பிதுர்க்களை நரகத்திலிருந்து மீட்பவர் யாரோ? இதைப்பற்றி சாஸ்திரங்கள் மௌனம் சாதிப்பதேனோ? எல்லாம் பார்ப்பனரின் புரட்டுகள்.

இவைகளை யெல்லாம் விட இன்னொரு பெரிய மோசமிருக்கிறது. அதாவது, பார்ப்பனரின் அனுக்கிரகமில்லாது ஆலயங்களில் ஆண்டவனை தரிசிக்க இயலாது. இதொரு முக்கிய விஷயமாதலால் இதைத் தனியாக ஒரு வியாசம் வரைவோம். நிற்க,

இங்ஙனம் பார்ப்பனர் இவ்வளவு ஆதிக்க முள்ளவர்களா யிருப்பதற்கு அவர்கள் செய்துள்ள சூட்சிகளே முக்கிய காரணமாயினும் அவைகளுக்கு உதவி செய்வது நமது அறியாமையேயாகும்.

P. E. P. நாடார்.

---

## ஆசைவேண்டியதே; ஆனால்,

ஆசையில், புகழ்ச்சிக்குரியனவும் இகழ்ச்சிக்குரியனவுமான இருவகையுண்டு. புகழ்ச்சிக்குரிய ஆசைகள் அறச்செயல்களைச் செய்யுமாறு மனிதனைத் தூண்டுகின்றன; அவை, மனிதரைச் சாந்தமும், அறிவொளியும், நற்குணமும் பெற்றவராகச் செய்கின்றன. இகழ்ச்சிக்குரிய ஆசைகளோ, நேர்மையற்ற முறையைக் கைக்கொள்ளுமாறும், அபினியையும் லாகிரிக்குடிவகைகளையும் வழங்குமாறும், ரப்பர் தங்கம் நிலம் ஆகிய வற்றிற்காகத் திக்கற்ற ஜனங்களைக் கொலைசெய்யுமாறும் மனிதரைத் தூண்டுகின்றன.

புத்தமதம் இகழ்ச்சிக்குரிய ஆசைகளைக் கண்டிக்கிறது. புகழ்ச்சிக்குரிய ஆசைகளை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்துகிறது. புத்தர் இச்சையின் பாற்பட்டதும் காமத்தின் பாற்பட்டதுமான ஆசையைக் கண்டித்தார். உயரிய ஆசைகளை வளர்க்கும் மனப்பான்மை வளர்த்து, புகழ்ச்சிக்குரிய செயல்களையும் சொற்களையும், சிந்தனைகளையும் இயற்றவேண்டுமென வற்புறுத்தினர். இச்சையும் காமமும் அறியாமையினின்றும் பிறக்கின்றன; உயரிய ஆசைகளை வளர்க்கும் மனப்பண்பும், புகழ்ச்சிக்குரிய நற்செயல்களும் தெய்வத ஞானத்தினின்றும் உதிக்கின்றன.

எல்லா நற் செயல்களும், சொற்களும், நற்கருத்துக்களும, உயரிய ஆசைகளின் மூலாதாரத்தினின்றுமே உதிக்கின்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸ்ரீநிவாசன்.

ஓர் சிறு நாடகம்.

A. C. பாண்டியர் எழுதியது.

இடம்—பொதுஜன வாசகசாலை.
காலம்—காலை 9 மணி.

கிருஷ்ணய்யங்கார்—நண்ப ஸ்ரீநிவாசா, இன்று மஹாத்மா காந்தியடிகளின் கதர்த் தொண்டைப்பற்றிய பிரசங்கம் காந்தி சவுக்கில் நடக்கப்போகிறது. காங்கிரஸ் தலைவர்களெல்லாம் வரப்போகிறார்கள். நமது தொண்டர்களை யெல்லாம் இந்த மணிக்கு அழைத்துவரவேண்டும்.

ஸ்ரீநிவாசன்—சகோதரரே, தாங்கள் காங்கிரஸ் கமிட்டியின் செக்ரட்டேரியாய் வந்தபிறகு எவ்வளவோ முன்னேற்றம் நமது தேசத்தில் உண்டாகியிருக்கிறது. தங்களுடைய சுயநலமற்ற முயற்சிகள் எங்களைப் போன்ற எளியவர்களுக்கு மிகவும் ஒத்தாசையாயிருப்பதுடன் நாங்களும் தேசசேவையில் பங்கெடுத்துக்கொள்ளவும் சௌகரியமாயிருக்கிறது. இன்றைய கூட்டத்திற்கு அக்கிராசனர் யார் வரப்போகிறார்கள்? தயவு செய்து தெரிவியுங்கள்.

கிரு—இன்றைய மீட்டிங்கிற்கு ஸ்ரீமான் அனைவரதம்பிள்ளையவர்கள் அக்கிராசனர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்கள் பிரசங்கியார். நண்பர் குழந்தையும் கூட வருகிறாராம். நாம் எவ்வளவுதூரம் காங்கிரஸில் ஊழியஞ் செய்கிறோமென்பதை நமது தலைவர் சத்தியமூர்த்தியவர்கள் காண வேண்டுமென்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கவனித்துக்கொள்ளும்.

சிவசங்கரன்—ஸ்ரீநிவாசா, நமது தலைவர்கள் கட்டளைப்படியே நாம் நடக்கவேண்டியது அவசியம். அது நமது கடமையுமாகும். தேசத்தொண்டைப்பார்க்கிலும் சிறந்தது வேறுண்டோ? நமது சகோதர தொண்டர்களுடன் கூடியுழைப்பது எவ்வளவு சந்தோஷத்தைத் தருகிறது! மஹாத்மாவின் கதர்த்தொண்டானது நம்போன்ற ஏழைகளின் பசிப்பிணியை மாற்றும் மருந்தாகவல்லவோ யிருக்கிறது! நாம் சீக்கிரம் உணவருந்தி விட்டு மூன்று மணிக்கே அக்கிராசனரைக் காண வேண்டும். இன்றைய பிரசங்கியாரான தலைவர் திருவாளர், சத்தியமூர்த்தியவர்களை ரெயில்வே ஸ்டேஷனில் வரவேற்கவேண்டியதிருந்தாலுமிருக்கலாம்.

கிரு—ஆம் ஆம். தலைவரை வரவேற்க வேண்டியதுமிருக்கிறது. அது விஷயமாய் தொண்டர் படைத் தலைவர் துரைஸாமி அய்யங்காரவர்களுக்கு தாக்கல் கொடுத்திருக்கிறேன். அதற்கு சில தொண்டர்கள் மட்டும் வந்தாலும் போதுமானதேயாகும். மீட்டிங் நடக்குமிடத்தில் சந்தடியில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். ஆனகையால் நீங்களும் இதரதொண்டர்களும் காந்தி சவுக்கிற்கே வந்துசேருங்கள். நான் மற்றவேலைகளைக் கவனிக்க வேண்டியதிருக்கிறது. போய்வருகிறேன்.

ஸ்ரீநி—எங்கள் வந்தனம். (செக்ரட்டேரி அய்யங்கார்போய்விடுகிறார்.) நண்ப சிவசங்கரா, நாம் சீக்கிரம் நமது சகாக்களையும் சேர்த்துக்கொண்டு தொண்டர் படைத்தலைவரவர்களையே முதலில் பார்க்கவேண்டும். ஏனெனில் அவர் கட்டளைப்படி நடக்க வேண்டியது நமது கடமையாகும்.

சிவ—உண்மைதான். தலைவரின் கட்டளைப்படி நடக்க வேண்டியது அவசியமேயாகும். ஆகையால் நாம் சீக்கிரம் ஒன்று சேருவோம்.

(எதிர் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஜஸ்டிஸ் கட்சிக்காரர்)

சுப்பிரமணியன்—நண்ப ஸ்ரீநிவாச, சிவசங்கர, என்ன விசேஷம்? காங்கிரஸ் கமிட்டி செக்ரட்டேரி அய்யங்கார் என்னென்னவோ மாயப்பேச்சுகள் பேசினரே! காங்கிரஸ் பார்ப்பனர் செய்யும் மோசங்களும் புரட்டுகளும் இன்னும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லை போலிருக்கிறது. ஆகையினாலேதான் நீங்களும் உங்கள் சகாக்களும் பார்ப்பனர் ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடுகிறீர்கள். பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே பார்ப்பனர் நம்மை ஆட்டி வைக்கிறார்கள். கிருஷ்ணய்யங்கார், குழந்தையும் சத்தியமூர்த்தியுடன் வருவதாய்ச் சொன்னாரே இதில் கடுகளவாவது உண்மையுண்டா? பார்ப்பனர் நம்மை நண்பரென்றும் சகோதரரென்றும் சொல்லுவதெல்லாம் உதட்டளவேயன்றி வேறல்ல. நம்மை முன்போல இழிவாய்ப்பேசினால் நாம் அவர்களுக்கு அடங்கி நடக்கமாட்டோமென்பது நன்றாய்த் தெரிந்திருக்கிறார்கள். நான் பார்ப்பனரல்லாதார் நலத்தை நாடு வோனாதலால் இவ்வளவும் உங்களிடம் சொல்லவேண்டியது என் கடமையாகும். உண்மையை அறிய உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்கள் தலைவராகக் கொண்டிருக்கிற தொண்டர் படைத் தலைவர் துரைஸாமி அய்யங்காரை இன்று 2 மணிக்கு அவர் வீட்டில்போய் பார்க்கவேண்டும். அப்போது பார்ப்பனர் நம்மிடம் பேசுவதுபோல நம்மை நடத்துகிறார்களாவென்று அறிந்துகொள்ளலாம். அதன் பிறகு நாம் சந்திப்போம். போய்வாருங்கள்.

சிவசங்கரன்—சகோதரர்களே! ஜஸ்டிஸ் கட்சியார் நம்மைப்பிரித்துவிடச் சூட்சி செய்வார்களென்றுளங்கள் தலைவர் முன்சொல்லியது சரியாய் விட்டது. காங்கிரஸ் வேலைகள் சரியாய் நடவாமலிருக்க வேண்டுமானால் முதலில் தொண்டர்களை பிரித்துவிட வேண்டிய அவசியத்தை நீங்கள் நன்றாயறிந்திருக்கிறீர்களென்பதற்கு உங்கள் சூட்சியான வார்த்தைகளே போதுமான ருசுவாகும். போதும் போதும் உங்கள் உபதேசம். தேசம் எக்கேடுகெட்டாலும் உங்களுக்கு உத்தியோகம் பெரியதே தவிர வேறென்ன வேண்டும்? உங்கள் பேச்சைக்கேட்டு ஆகவேண்டிய தொன்றுமில்லை. போய்வாருங்கள்.

சுப்பிரமணியன்—தோழரே! கோபித்துக்கொள்ளவேண்டாம். பார்ப்பனருக்கு தேசாபிமானம் சுயநல வெறுப்பு, பரோபகாரம் என்பன கொஞ்சமுங் கிடையாதென்பதை நான் சொல்லியபடி சோதித்துப் பார்த்த பிறகாவது அறிந்துகொள்வீர். உண்மையையறிந்து நடக்க உமக்கு விருப்பமிருந்தால் என்வார்த்தையை நம்பும். பார்ப்பனரிடத்தில் வெகுகாலம் பழகிய பின்பும், அவர்கள் பார்ப்பனரல்லாதாரை சகோதரராக மதித்து நடத்துவதில்லையென்பதை அறிந்த பின்புமே நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து ஊழியம் புரிகிறேன். நீங்களும் பார்ப்பன மோசத்தைச் சீக்கிரம் அறிந்துகொள்வீர்கள். கடவுள் உங்கள் உள்ளத்தில் சுயமதிப்பை யுண்டாக்குவாராக. நான் போய்வருகிறேன்.

(போய்விடுகிறார்.)

ஸ்ரீநிவாசன்—அன்பரே! சுப்பிரமணியனும் முன்பு தொண்டர்படையில் சேர்ந்து ஊழியம்புரிந்து கள்க்கடை மறியலில் மூன்று மாசம் ஜெயில் சென்றவரன்றோ? அவர் இப்போது சொல்லிய வார்த்தைகளில் உண்மையுண்டாவென்று பரீட்சிக்க என் மனந் தூண்டுகிறது. உண்மையைக் காணவேண்டியது அவசியமல்லவா? இன்று நான் அவர் சொல்லியபடியே நமது தலைவர் துரைச்சாமி அய்யங்காரவர்கள் வீட்டிலேயே அவரைப் போய்ப் பார்க்கிறேன். தாங்களும் என்னுடன் வரவேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

சிவசங்கரன்—உன்னுடைய எண்ணம் அதுவானால் அது எனக்கும் சம்மதமே, ஆனால் நாம் இது விபரத்தை வெளியிடாமலே செல்வது நலம். அப்போதுதான் நாம் எதையும் சரியாய்த் தெரிந்துகொள்ள சௌகரியமாயிருக்கும். நாம் சீக்கிரம் உணவருந்திவிட்டு 2-மணிக்கெல்லாம் இங்கு சந்திப்போம். தொண்டர் படையுடன் செல்வது நலம்.

(இருவரும் பிரிந்து போகிறார்கள்.)

(இடம்—தொண்டர்படைத் தலைவர் வீடு. காலம்—பகல் 2-மணி)

துரைசாமி அய்யங்கார்—வாருங்கோ ஸார் கிருஷ்ணய்யங்காரவாள்! ஸ்ரீநிவாசன் முதலியவர்களிடத்தில் சங்கதியைத் தெரிவித்து வேண்டிய ஏற்பாடு செய்துவிட்டீர்களா? இங்கு வேண்டிய சகலகாரியமும் தொண்டர்படை செக்ரட்டேரி ராமசுப்பையர் செய்துவிட்டார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை வரவேற்பதில் பிராமணத்தொண்டர்களையே சேர்க்கும்படி செய்யச் சொல்லியிருக்கிறேன். இரண்டொரு வேளாளரும் நாயுடுவும் கூடவருவார்கள், பெட்டி படுக்கை முதலியவை தூக்கவேண்டியதிருக்குமல்லவா? சரிதானே.

(ஸ்ரீநிவாசனும் சிவசங்கரனும் வீட்டின் பக்கம் வருகிறார்கள்.)

கிருஷ்ணய்யங்கார்—சபாஷ் தங்களுக்குள்ள புத்தி சூட்சமம் யாருக்குண்டு? சரியான ஏற்பாடு செய்தீர்கள். சூத்திரப்பயல்களையும் பஞ்சமப்பயல்களையும் சரிப்படுத்திவர 11-மணியாய் விட்டது. 12-மணிக்குத்தான் ஸ்நானஞ்செய்து சாப்பிட்டேன். சப்இன்ஸ்பெக்டர் வரதாச்சாரி ஆத்து (வீட்டு)க்கு வந்தார். இன்று அவர் தான் பிரசங்கத்தின் குறிப்பெழுத வருவாராம். அச்சக்கணியன் ஜஸ்டிஸ் அபிமானி அருணாசலம்பிள்ளை சப்இன்ஸ்பெக்டராயிருந்த காலத்தில் மகா தொல்லையாயிருந்தது. ஸார். கூட்டங்கூட்டினால் நம்மைக் கவனிப்பதே அவனுக்கு வேலை. இப்போது குஷாலாய் நமது சத்தியமூர்த்தியே சலாமல்லவா. நமக்கும் பீடை ஒழிந்தது போலாச்சுது. டிப்டி சூப்பெரண்டெண்டெண்ட் சுந்தரமய்யரில்லாவிட்டால் அவனை மாற்றி வரதாச்சாரியைக் கொண்டு வரவும்முடியாது.

துரைச்சாமி அய்யங்கார்—மணி 2 ஆய்விட்டது. இன்னும் மல்வேட்டியுடுத்தியபடியே யிருக்கிறீரே. சீக்கிரம் கதருடுத்திக்கொண்டு காங்கிரஸ் ஆபீசுக்குப் போகவேண்டாமா? டிரைவர் வந்துவிட்டானோ இல்லையோ? கார்சீக்கிரங் கொண்டுவரச் சொல்லும். நானும் கதருடுத்திக் கொண்டுவருகிறேன்.

மணவாள அய்யங்கார்—எண்டா துரை! இந்தப்பயல் கிட்டுவும் (கிருஷ்ணனுக்குச் சுருக்கப்பெயர்) நீயும் காங்கிரஸ் காங்கிரஸ் என்று பேசி பறைப்பயலையும் சூத்திரப்பயலையுந் தொட்டுக்கொள்வதும் அவர்களுடன் உலாவுவதும் குலாவுவதும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை. உங்களைக் கேட்டால் ஸ்நானஞ்செய்துவிடுகிறோமென்று சொல்லுகிறீர்கள். இந்தப்பாழும் வெள்ளைக்கார ராஜாங்கம் உங்களை இப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது. ஹிந்து ராஜ்ஜியமாயிருந்தால் இந்தத் துன்பமுண்டா? நீங்கள் பிராமண்யத்துக்கு தீங்குசெய்கிறீர்கள். ஹிந்து ராஜாங்கமாயிருந்தால் அந்தபறைப்பயல் ஸ்ரீநிவாசன் நண்ப, தோழ, சகோதரா. என்று பேசுவானோ? அவன் நாவை அறுத்துவிடமாட்டார்களா? சூத்திரப்பயல்கூட ஸார் என்கிறான். உங்கள் காங்கிரஸும் காந்தியும்—மண்ணாப்போகமாட்டார்களா! என் வயிறு எரிகிறதடா.

கிருஷ்ணய்யங்கார்—அண்ணா கோபித்துக்கொள்ளாதீர்கள். காலமறிந்து நடக்கவேண்டியது அவசியமில்லையென்று சொல்லுகிறீர்களா? நமது முன்னோர்கள் பல சாஸ்திரங்களையேற்படுத்தி பலஜாதிகளையுங்கற்பித்து எல்லோரையும் ஆரியனுக்குப் பிறந்தவர்களென்று எழுதியிருக்கிறார்கள். பிராமணீயம் நிலைபெற வேண்டி பல புராணங்களியற்றியிருக்கிறார்கள். பல அரசர்களையும் வசியப்படுத்தி நமக்குக் கீழிருந்து அரசாட்சி செய்யும்படி செய்தார்கள். சாதிச் சட்டப்படி சரியாய் நடப்பது முடியாததாதலால் சாதிச்சண்டைகள் பெருத்தது. போதாக்குறைக்கு மகம்மதியர்கள் படையெடுத்து ஆரியாவர்த்தத்தைக் கைக்கொண்டு விட்டார்கள். அப்போதும் நமது பெருமையைக் காப்பாற்றிக் கொண்டோம். வெள்ளையர் ராஜாங்கம் வந்திருக்கிறது. இதிலும் நமது சாமர்த்தியத்தால் காலத்திற்குத்தக்கபடி நடந்து நாம் மேன்மையடைய வேண்டியது அவசியமென்பதை நீங்கள் மறுக்கிறீர்களா? 100-க்கு 3 பேர் உள்ள பிராமண ஜாதி 100-க்கு 97 உத்தியோகங்களை வகிப்பதற்குக் காரணம் காங்கிரஸால்லவா? நமது துரையும் நானும் வக்கீல்களாயிருக்கிறோம். நமது சுற்றத்தார் எத்தனை பேர் உத்தியோகஸ்தர் ...

சொன்னால் பார்ப்பனரல்லாதார் இப்போதிருக்கிற நிலைமையில் காங்கிரசும் காந்தியும் தான் பிராமணர்களைக் காப்பாற்றியதென்று நன்றாயறிந்து கொள்ளுங்கள். காந்தியவர்களின் சர்க்கா சங்கத்தில் பிரசாரகர்கள் என்ற பெயருடனும் மற்றும் பல விதமாகவும் எத்தனை பிராமணக் குடும்பங்கள்பிழைக்கின்றனவென்பதை அறியீர்களோ போலும்.

(வெளியில் நின்று உற்றுக்கேட்ட தொண்டர் ஸ்ரீநிவாசனும், சிவசங்கரனும் வீராவேசத்துடன் தொண்டர் தலைவர் துரைச்சாமி அய்யங்காரின் வீட்டின் முன் கட்டில் நுழைந்தனர்.)

பேச்சை நிறுத்திவிட்டு ஸ்ரீநிவாசா! நீ என்ன காரியஞ்செய்தாய்? உனக்கு கொஞ்சமேனும் அறிவில்லை யென்பதைக் காட்டிவிட்டாய். உன்னை இங்கேயார் வரச்சொன்னது? உடனே போ காங்கிரஸ் ஆபீசுக்கு என்று தனக்குள் கோபத்தை உள்ளேயடக்கிக் கொண்டு இரண்டுவித அர்த்தத்துடன் கூறினார்.

மணவாள அய்யங்கார்—மிகுந்த கோபாவேசத்துடன் அடா பறைப் பயலே! நீ யெப்படியடா என் வீட்டுக்குள் வரலாம்? தெருவில் வரவும் யோக்கியமில்லாத நாயே வெளியே போ என்று வெற்றிலை தட்டுவதற்காக வைத்திருந்த இரும்புக் குழவியால் ஸ்ரீநிவாசன் மீது எறிந்தார். அது ஸ்ரீநிவாசன் நெற்றியில் பட்டு கீழே விழுந்தது. மகாத்மாகாந்தியடிகள் ஏற்படுத்திய சத்தியாக்கிரகப் போருக்குத் தயாரிக்கப்பட்ட தொண்டனாகிய ஸ்ரீநிவாசனும் மிகவும் சாதுவாயிருந்தாலும் பார்ப்பனர் செய்யும் மோசங்களும், பித்தலாட்டங்களும் உள்ளே பேசிக்கொண்டிருந்த பார்ப்பனர்களின் வாயினாலே கேட்டுத் தெளிந்து கொண்டானதலால் அந்தக் குழவி தன் நெற்றியில் பட்டதோ அந்தக் குழவியால் மணவாள அய்யங்கார் மேலே எறிந்தான். அது குறி தப்பி அவருடைய புத்திரனாகிய துரைஸாமி. அய்யங்காருடைய முன் பற்களை உடைத்துவிட்டுக் கீழே விழுந்தது. பக்கத்தில் நின்ற சிவசங்கரன் ஸ்ரீநிவாசனைப்பிடித்து நிறுத்திக் கொண்டு,

சிவசங்கரன்—தேச பக்தி வேஷம் போட்ட பார்ப்பனப்பதர்களே! உங்கள் மோசங்களும் புரட்டுகளும் உங்கள் வாயாலேயே கேட்டுவிட்டோம். எங்களால் காரியம் ஆக வேண்டிய போதெல்லாம் சகோதரர்களென்றும் நண்பர்களென்றும் பேசுவதும் நாங்களில்லாத விடத்தில் சூத்திரர்களென்றும் பறையர்களென்றும் இழிவுபடுத்திக்கூறுவதும், காங்கிரஸ் காரர்களென்றும் கதர்ப் பக்தர்களென்றும் வெளியில் நடிப்பதும் வீட்டிலிருக்கும் போது அந்நிய நாட்டு வஸ்திரம் கட்டுவதோடு உங்கள் பெண்டுக்கு பட்டுச் சேலைதவிர கதர்ச் சேலைகளைக் காணமுடியாமலே வைத்திருப்பதும் உங்களை தேசத்துரோகிகளென்று வெளிப்படுத்திவிட்டது. நீங்கள் சகோதரர்களென்று சொல்வதும் பிராமணரல்லாதாரை ஏமாற்றி அடிமைப்படுத்தும் வார்த்தைகளென்பதை அறிந்து கொண்டோம். இனி உங்கள் மாயவார்த்தைகளை எந்த பிராமணரல்லாதாரும் நம்பி மோசம் போகாமலிருக்கும் வழியில் நாங்கள் தொண்டாற்றுவோம். உங்களுக்குத் தைரியமிருந்தால் இன்று உங்கள் தலைவர் சத்தியமூர்த்தியைக் கொண்டு பிரசங்கஞ் செய்யச் சொல்லுங்கள். உங்கள் மோசங்களையெல்லாம் வெளியிட்டு உங்களை சந்திசிரிக்கும்படி செய்கிறோம் என்று கூறிவிட்டு ஸ்ரீநிவாசனையும் கூட்டிக்கொண்டு வெளியேவந்து சுப்பிரமணியனை சந்தித்து இது முதல் நாங்களும் எங்கள் சகோதர தொண்டர்களும் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்குரிய வழியில் ஊழியஞ் செய்கிறோமென்று வாக்களித்து ஆனந்த முற்றிருந்தான்.

மணவாள அய்யங்கார்—கிருஷ்ணய்யங்காரே பார்த்தீர்களா? நீங்கள் செய்த வேலையின் பலனை. யாரோ ஏவுதல் செய்து பறைய ஸ்ரீநிவாசனை நமது வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தப்பயலும் துணிந்து அக்கிரகாரத்துக்குள் நுழைந்து வந்துவிட்டான். குழந்தை துரையின் பல் நாலும் உடைந்தது தான் மிச்சம். உடனே போலீசுக்கு ஆளனுப்பி சத்தியமூர்த்தி இங்கு இறங்க வேண்டாமென்று

(இதன் தொடர்பு 3-பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

"பேரா வுபவா சத்தினைஞப் பின்பு [மோரா யிரத் தாண்டில்
தாரார் மற்றத் தலைகடிய ஓம்ருன் [பற்றித தசக்கிரிவன்"
"அன்னகாலை அயன்தோன்றி அவனை [நோக்கி யருந்தவத் தின்
கின்னையொப்பார் நீயன்றி யொருவரில் [லை கிங்காதத்தால்
மூவ்வம் அரிந்தலை யெல்லாம் முன்பு [போல முளைத்தெழுக
என்ன வவைதாம் பண்டைபிலும் எழி [லுண்டாக எழுந்தவாம்"

(இராமாயணம் உத்தரகாண்டம்)

பதினாயிரம் வருடம் தவம்புரிந்து ஆயிரம் வருடத்திற்கு ஒரு தலையாக ஒன்பது தலைகளையும் செந்தீயிடைச் சிந்தியும் சித்தி பெறாத இராவணன் பதினாயிரம் ஆண்டுமுடிவில் பத்தாவது தலையையும் துணிக்கத் துணிந்த பொழுது, உபாசனாமூர்த்தி வெளிப்பட்டதாகக் கதை சொல்லக் கேட்டிருந்த கோவிந்தசாமி தமது பிரார்த்தனைக்கு இரங்கி அழகர் காட்சி கொடாமையினாலே தாம துவக்கத்தில் சங்கற்பம் பண்ணிக் கொண்டது போல வேலையை முடித்துக்கொள்ளத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார். திருக்குறிப்புத் தொண்ட நாயனாருக்கு கடிவைப் பொழுதிற் காட்சி தந்த கதையைத் தமக்கு உதாரணமாகக் கோவிந்தசாமி எண்ணியிருந்தார் போலும். ஒரு நாள் அழகருக்கு அர்த்தஜாமக் கட்டளையை முடித்த பட்டர் திருக்கோயிற் கதவு தாழிட்டுக் கொண்டு நின்றார். தரிசனத்துக்கு வந்த ஜனங்கள் எல்லாம் அனேகமாகக் கலைந்துவிட்டனர். அத்தருணம் கோவிந்தசாமி கருங் கச்சையை யெடுத்து இறுகக் கட்டித் தலையிற் குல்லாவை வைத்துக்கொண்டு வாளாயுதத்தை வலக்காத்திற் பிடித்து மாயவன் சந்நிதியை நோக்கி நின்றுகொண்டு கண்டத்திற் கட்கத்தைப் பூட்டி "ஏ அரி பரந்தாமா! அச்சுதா!! கோவிந்தா!!! அடியாருக் கிரங்குதல் உன் கடமை; அதனைச் செலுத்தாது சும்மா விருக்கின்றாய்; என்றாலும், நான் என் கடமையைச் செலுத்தா திருக்கப் போகிறதில்லை என்று கூறிக் கழுத்தை அரியத் தொடங்கினார்.

"அளவையா னளப்பரி தறிவினப்புறத் துளவையா உபரிடத் தலைகளோ துவ மெனயாற் பொருள்களாற் கெனக்கு [ருதவன்
களவையா றறிகுவார் மெய்ம்மை கண் [டிலார்"

(கம்பஇராமாயணம் இரணியவதைப் படலம்.)

சாரங்கமேனிக் கமலக் கண்ணனார் திருவையோ! கோவிந்தசாமியின் உபவாசப் பயனோ!! யாதோ திருந்த அவம் பூட்டிக் கொண்டிருந்த பட்டருக்குக் கோவிந்தசாமியின் செய்கை எப்படியோ தெரிந்து வெகு விரைவில் ஓடிவந்து கத்தியைப் பிடித்துக் கொண்டுகத்தினார். உடனே பக்கத்திலிருந்த ஜனங்களும், போலீசாரும் வந்து கூடிக் கத்தியைப் பிடுங்கினார்கள். ஆடித் திருவிழா பந்தோபஸ்துக்காக வந்திருந்த போலீசார்கள் அவ்விடத்திலேயே கோவிந்தசாமியை ஒருவாறு விசாரணை பண்ணித் தற்கொலைக்குப் பிரயத்தனம் செய்ததாக அபிப்பிராயப்பட்டுக் கேஸ் நடத்துவதற்கு அழகர் கோவில் தேவஸ்தானம் தர்மகர்த்தாவான வக்கீல் ஐயங்காரவர்களிடம் அனுப்பினார்கள். கருங் கச்சை குல்லாய் வாளாயுதம் இம்மூன்று சாமான்களும் அவரோடு ஐயங்காரவர்களுக்கு அனுப்பப்பட்டன. அதி விவேகியான அத் தருமகர்த்தர் கோவிந்தசாமியைத் தனியாக அழைத்து வைத்துக்கொண்டு, ஏன் தற்கொலை செய்யத் துணிந்தீர்? எனக் கேட்டனர். கோவிந்தசாமி தமது மனக்கருத்தைச் சொன்னார். தருமகர்த்தர் அதனை நம்பி அவர் மீது கேஸ் போடாமல் நிறுத்திக்கொண்டு அவரைத் தமதில்லத்தில் இருக்கும்படி செய்தனர்.

அந்த ஆடி மாதக் கடைசியில் பெருநாழி க. முனியாண்டி பிள்ளையவர்களும், முத்துச்செல்லையாபுரம் அவிராஜ சங்கரலிங்கப் பிள்ளையவர்களும் மதுரைக்குச் சென்றிருந்தார்கள். மதுரை வடக்கு வாசல் யானைக்கல் தெருவில் பலசரக்கு வியாபாரம் செய்து கொண்டிருக்கும் சங்கு செட்டியார் என்பவர் க. முனியாண்டி பிள்ளையவர்களுக்கு முன்னமே பரிச்சயமுள்ளவராகையால் அவர் கடையிற் சென்று சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அத்தருணம் சங்கு செட்டியார் தமது கடைக்குள்ளிருந்த கோவிந்தசாமியை அவர்களுக்குக் காட்டி இவ்விளைஞரை நீங்கள் இதற்கு முன் அறிவீர்களா என்றனர். இவரை அறியோம் என்றார்கள் அவ்விருவரும். உடனே கோவிந்தசாமி அவர்களை நோக்கி நீங்கள் முத்துச் செல்லையாபுரம்; தங்களருகிலிருப்பவர்கள் பெருநாழி; தங்களைப் பன்முறையும் பார்த்திருக்கிறேன் என்றார். அவர்கள் வியப்பெய்தி அவரை நன்கு விசாரணை செய்தார்கள். கடைசியாக அவர் வாய்மொழியிலிருந்து மாவிலங்கை யூரினரென்று உறுதியாகத் தெரிந்த பின்னர், என்ன காரியமாக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் அழகர் கோவில் ஆடித் திருவிழாவிற்கு வந்ததையும் அழகர் சமக்ஷம் காட்சி கொடாமைக்காகக் கழுத்தைத் துணிக்க முயன்றதையும் போலீசார் மூலமாகத் தர்மகர்த்தா ஐயங்காரவர்கள் வசம் ஒப்புவித்ததையும் அத் தர்மகர்த்தரால் இச் சங்கு செட்டியாரிடம் தற்சமயம் அனுப்பப்பட்டிருப்பதையும் விவரமாகச் சொன்னார்.

மாவிலங்கைக்கு எப்போது வருவீர் என்று கேட்டார்கள். என் அரிவாளை என்னிடம் கொடுத்துவிட்டால் இன்றைக்கே உங்களுடன் புறப்படுவதற்குச் சித்தமாயிருக்கிறேன் என்றார். பின்பு சங்கு செட்டியார் அரிவாளை அவர்களிடம் ஒப்புவித்து "நானும் தர்மகர்த்தா அவர்களும் இவரிடம் அரிவாளைக் கொடுத்தால் பின்னும் தற்கொலை செய்துகொள்வாரோ யாதோ வெனச் சந்தேகித்துக்கொண்டே இவைகளை இவரிடம் கொடாது நிறுத்தி வைத்திருந்தோம். ஆகையினாலே தாங்கள் இவர் சொல்லுகிற பேர்வழியிடம் இப்பொருள் மூன்றையும் சேர்ப்பித்துவிடுங்கள்" என்று கூறி கோவிந்தசாமி யையும் அனுப்பினர். மதுரை ஜங்ஷனில் ரயிலேறிக் குடியூரில் வந்திறங்கிக் கமுதி மார்க்கமாக அவ்விருவரும் தத்தம் ஊர்வந்து சேர்ந்தார்கள். கோவிந்தசாமி குடியூரிலிருந்து குமாரக்கடவுள் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் கொடுமளூர் மார்க்கமாக மாவிலங்கைவந்து சேர்ந்தார். அரிவாள் முதலிய சாமான்கள் பெருநாழியில் க. முனியாண்டி பிள்ளையவர்கள் வசம் இருந்தன. சில நாட்சென்று கோவிந்தசாமியின் சொந்தக்காரர்கள் வந்து வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

அழகர் கோவிலுக்குச் சென்று திரும்பி வந்த கோவிந்தசாமி தமது வழக்கம் போல விநாயகக் கடவுள் ஆலயத்திற்கு நியதி தவறாது வழிபாடு செய்துவந்தனர். அவ்விநாயகர் கோவில் வெள்ளிக்கிழமை வெளியிலிருப்பதைக் கற்கால்கள் நிறுத்திச் சுவரெழுப்பிக் கள்ளிக்கோட்டை ஓடுகளால் மேய்ந்துவிடலாமென்று முயற்சியெடுத்தார். பலருக்கும் பொதுவான ஆலயத்தை இவரொருவர் கட்டவேண்டிய அவசியமென்ன? இவருக்கிருக்கும் பக்தியும் சிரத்தையும் மற்றவர்களுக்கும் உண்டு எனக் கூறி அதனை அவ்வூரார் ஒருவர் தடுத்துவிட்டார். அதனால் அத் திருப்பணி முட்டுப்பட்டு விட்டது. பின்னர் கோவிந்தசாமி ஸ்தலயாத்திரை செய்யவிருப்பங்கொண்டு இராமேஸ்வரம் முதல் காசிவரையுள்ள பற்பல ஸ்தலங்களைத் தெரிசித்துக்கொண்டு பூசஞ்சாரம் பண்ணினர். அக்காலத்தில் அவரது செயல்கள் ஒன்றும் வெளிப்படவில்லை. மானாமதுரைப் பக்கத்திலுள்ள மாயாண்டி சுவாமிகள் என்னும் ஒரு மகானிடத்தில் இவர் உபதேசம் பெற்றிருக்கின்றனர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். சிற்சில

பெருநாழிக் கிராமத்தில் காலஞ்சென்ற சோதிட வித்துவான் விஜயராமலிங்கம் சேர்வைகாரரவர்களைக் குறித்து ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதத்தில் குருபூஜை நடத்துவதுண்டு. இரத்தாட்சி வருடக் குருபூஜைக்குப் பம்மனேந்தல் மடத்திலிருந்த கோவிந்தசாமியும் அழைக்கப்பட்டிருந்தார். அவரை மதுரையில் பார்த்திருந்த நிலைமை அச்சமயம் மாறுபட்டுத் தோன்றிற்று; நீர் வேட்கை மிகுந்தவன் தண்ணீர்த் தடாகத்தைத் தேடித்திரிவதைப் போல ஒரு வித நோக்கத்தோடு காணப்பட்டார். அக்குருபூஜை முடிந்து சில தினங்கள் வரை பெருநாழியிலேயே தங்கியிருந்தார். அவர் அவ்வூர்த் தாண்டவவிநாயகர் ஆலயத்திற்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார். அவ்வாலயத்தின் சுவர்களைச் சுண்ணாம்பு பூசுவதற்காக ஒரு சாக்கில் (கோணி) சுண்ணாம்பு நிறைத்துக் கோவில் முன்மண்டபத்துத் தென் கிழக்கு மூலையில் வைக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் அங்கு சென்றிருந்த கோவிந்தசாமி அச்சுண்ணாம்பு மூட்டையை ஆசனமாகக் கொண்டு பத்மாசனமிட்டு வடக்கு முகமாக வீற்றிருந்தனர். அவருக்கு வழக்கமாக அவ்வூருக்கு வந்த நாள் முதல் பணிவிடை பண்ணிக்கொண்டு வந்த ஒருவர் அவரெழுந்து வந்தவுடன் அன்னமளிப்பதற்காக ஆயத்தமாக நின்று கொண்டிருந்தார்; அவரெழுந்திருக்கவேயில்லை. பல தினங்களாக இரவு பகலாக எதிர்பார்த்திருந்தும் அவர் எழுச்சியைக் காணக்கூடவில்லை. ஆகாரம், நித்திரை மல ஜல விசர்க்கம், பேச்சு முதலியவைகளின்றிக் கண் மூடித்திருந்தனர். அக்காலத்து அவரையணுக யாவரும் அஞ்சினர். சில அன்பர்கள் பால் பழ முதலியவைகளைக் கொண்டு வந்து ஊட்டினர். ராம. தங்கண நாடார் என்பவர் திங்கட்கிழமைதோறும் ஒரு வேளை அன்னம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். பிள்ளைமார், தேவர், நாயக்கர், கவுண்டர் முதலிய பல வகுப்பு அன்பர்களும் பால் முதலியவை ஊட்டிவந்தனர். இவ்வாறு பற்பலமாதங்கள் கடந்தன.பலரும் பாலாதியன கொடுத்துவரினும் மட்டாகப் புசித்து வந்தனரேயன்றிக் கண்டவாறு புசித்தாரல்லர். யோகிகள் ஆலயத்துட் பிரவேசித்து நிஷ்டை கூடியிருக்க தினமும் சுமார் 2 மாதம் வரை கொடிய காரமுள்ள சுண்ணாம்புச் சாக்கில் யாதொரு வுபாதையுமின்றி வீற்றிருத்தலைக்கண்டு பலரும் இது ஓர் யோகபலமென்றும் அதிசயிக்கலாயினர். சுண்ணாம்பு பூசிய தரையில் படுக்கை விரித்து அதன் மீது ஓர் இரவு சில மணி நேரம் தூங்கியெழுந்த ஒரு மனிதன் என் கண்கள் சுண்ணாம்பு வெக்கையினால் எரிகின்றனவென்று சொல்லக் கேள்விப்படுகிறோமே! இப்புதிய சுண்ணாம்பு வெப்பத்தை எவ்வாறு சகித்தனர் என வியந்து கொண்டாடினர். அதன் பின்னர் ஓர் அன்பர் யோகியை மெதுவாகத் தூக்கிப் பக்கத்தில் இருக்க வைத்துக் கொண்டு உடனே அந்த இடத்தில் மண் சாந்திட்ட செங்கற்பீடம் ஒன்று இயற்றி அதனில் யோகிகளை அமர்வித்தனர். இவ்வாறு சில நாள் அன்னமும் பலவேளை பால் பழங்களும் புசித்து வந்தனர். கடந்த ஆறு மாதங்களாகப் பாலைத் தவிர மற்றொன்றையும் அருந்தாது இருந்து வருகின்றனர். அருப்புக்கோட்டையிலிருந்து ரெவரெண்டு ஓயிட் துரை அவர்கள் இவ்விடம் பிரசங்கத்திற்கு வந்திருந்த காலத்தில் யோகிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அக்ஷய வருஷம் சித்திரை ௴ 12 உ பார்க்கச் சென்றனர்.

யோகிகள் வீற்றிருந்த இடத்திற் புகுந்த பாதிரிதுரையவர்கள் அவரை நோக்கி "ஓ சாமியாரே நீர் ஏன் இப்படி உட்கார்ந்து கொண்டு பொது ஜனங்களை ஏமாற்றுகிறீர்கள்? உமக்கு என்னை தெரியும்? நீர் தெய்வத் தன்மையுள்ளவராக இருந்தால் இந்த நேரம் இங்கிலாண்டு தேசத்தில் என் வீட்டில் என்ன சம்பவம் நடக்கிறதென்று அறிந்து சொல்லக் கூடுமல்லவா?" என இன்னவாறு பல கேள்விகளைக் கேட்டாராம். பாதிரியாரைப் பார்த்த யோகிகள் "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்பதற் கிணங்க அவரையும் அவர் கேள்விகளையும் ஒரு பொருளாகக் கருதாது எப்பொழுதும் போல வீற்றிருந்தனர். பாதிரியார் கோவிந்தசாமி யோகிகளைப் போட்டோப் படம் எடுத்துக் கொண்டு போயினர். ரெட்டிச் சாமிகளும் கடுநிலிருக்கும் மைதின் பிச்சை சாயபுகளும் யோகிகளைப் பார்த்துவிட்டு அடிக்கடி பால் பழங்களைக் கொடுத்து, சொஸ்தமாயிருக்கும்படி ஜனங்களுக்கு எச்சரிப்புச் செய்துவிட்டுச் சென்றனர்.

பார்க்கவரும் ஜனங்கள் நாட்டுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டிருந்தனர். மல ஜல போசனமின்றி இருந்தவிடம் பெயராது பல மாதங்களாக ஒரு நாடார் யோகத்திலிருக்கிறார் என்ற கேள்வி நாலா பக்கங்களிலும் பரவிற்று. அக்ஷய ஹூ வைகாசி மாதக்கடைசியில் ஒரு வெள்ளிக்கிழமை இரவு 8—9 மணிச் சுமாருக்கு யோகிகள் திடீரென்று காணாமற் போய்விட்டார். அன்றிரவு பெருநாழியூரிலுள்ள நான்கு வருணத்து ஜனங்களும் கண்ணாடி விளக்குகளைக் கொளுத்திக் கையிற் பிடித்துக் கொண்டு பன்முகமும் ஓடி ஓடிப் பார்த்தும் காணாது கண் கலங்கினர். கோவிந்தசாமி யோகிகள் யோக முதிர்ச்சியாற் பறந்தனரோ! அல்லது நம்மை மறந்தனரோ!! பொதிகை மலை சதுரகிரி மலை முதலிய சித்தர் வாசங்களை விரும்பி யிவ்வூரைத் துறந்தனரோ!!! எனப் பலவாறு கூறித் துக்கித்தனர். நீங்கள் போடும் வெளிச்சத்திற்குக் கோவிந்தசாமி யோகிகள் புலப்படமாட்டார்; நான் காட்டுகிறேனென்று தனது கிரணங்களாகிய விளக்குகளைப் பரப்பிக்கொண்டு சூரியனுதித்தான். தாண்டவவிநாயகர் கோவில் பெருநாழிக்கு மேற்கிலுள்ள ஒரு குளக்கரையில் இருக்கின்றது. அது மிகப் புராதன ஆலயம். அதனை அப்பெருநாழியில் வசிக்கும் வை. சிதம்பரம் பிள்ளை என்பவர் கட்டி முடித்து அதற்கு நித்ய பூஜையும் நடப்பித்து வருகின்றனர். அத் திருவாலயத்தின் விஷயத்தில் பிள்ளையவர்கள் கொண்டிருக்கும் அன்பு மெச்சத்தக்கது. அக் கோவிலிலேயே இவ்யோகிகள் அமர்ந்திருந்தனர் என்பதனை முன்னமே கூறியிருக்கிறோம். அக்கோவிலுக்கு மேற்கில் 100 கெஜ தூரத்திற்குள் மரம் செடிகள் ஒன்றுமில்லாத வெளி நிலத்தில் கோவிந்தசாமி யோகிகள் வீற்றிருக்கக் கண்டார்கள். இச் செய்தி தெரிந்ததும் ஊர் ஜனங்களும், பக்கக் கிராமத்து ஜனங்களும் கும்பு கும்பாக வந்து கூடினர். வெயிலும் வர வரக் கொடூரமாய்க் காய்ந்து யோகிகள் போய்த் தங்கியிருந்த நிலத்திற்குச் சொந்தக்காரரான பெருநாழி அ. முனியாண்டி நாடார் என்பவர் யோகிகளுக்கு வெயிலின் கொடுமை தாக்காவண்ணம் உடனே ஒரு பந்தலியற்றி அவரைப் பார்க்க வருபவர்களுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்து வரும்படிக்கும் திட்டஞ் செய்து வைத்தனர். மறு தினமுதலே யோகிகளது நிஷ்டைக்குப் பங்கமில்லாமலே சுவரெழுப்பிக் கையடி தளமிட்டு ஓடு வேய்ந்து ஓர் வீடு சமைத்தும் வைத்தனர். தாண்டவவிநாயகர் கோவிலைவிட்டு யோகிகள் வெளியேறிப் போனதற்குப் பல காரணங்கள் கூறுகின்றனர். எது எவ்வாறாயினுமாகுக. யோகிகள் மீது அபிமானஞ் செலுத்தியவர்களிற் சிலர் மறுபடியும் யோகியை விநாயகர் கோவிலிற் சேர்த்துவிட எண்ணினர். தங்கணமே சிலர் கூடி யோகியை நிஷ்டையிலிருந்த வண்ணமே தூக்கிக்கொண்டு போய் முன்னிருந்த இடத்தில் வைத்து விட்டகன்றனர். ஜனங்கள் வந்திருக்க வசதியான ஒரு பந்தலும் கோவிலுக்கு முன் பக்கத்தில் அமைக்கப்பட்டது. யோகிகளுக்கு அவ்விடத்தில் இருக்க மனமில்லையோ, வேறு என்ன காரணமோ சித்தன் போக்கை சிவனே அறிய வேண்டும். அதை விட்டு வெளியேறி கோவிலின் பக்கத்திலுள்ள முள் வேலியிற்போய்ச் சாய்ந்தனர். அது இரவு நேரம்; விடிந்தவுடன் அவரைக் கண்ட சிலர் அந்தோ வென இரங்கிக் கடிதிற் சென்று கை கொடுத்துத் தூக்கி வந்தனர். யோகிகள் தமது இரண்டாவது ஆச்சிரமத்திற்குத் தம்மைக் கொண்டு போகும்படி சைகை செய்தனர். அவ்வாறே யாதொரு அட்டியுமின்றி அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர். அது முதல் அங்கேயே இருந்து வழக்கம்போல மௌனயோகம் சாதித்து வருகின்றனர்.

(இன்னும் வரும்.)